107

[Regist]ered No. 1514 ] 9 [September 1927.

107 Vol 2, No 9

# செங்குந்தமித்திரன்.

# SENGUNTHAMITHRAN

7-OCT

உள்ளுறை


| | |
|---|---|
| ஆசிரிசிரியரின் முன்னுரை | [illegible] |
| ஆராய்ச்சிப் பகுதி | [illegible] |
| நவராத்திரி விரதம் | ௫௨௩ |
| இன்சொல் | ௫௫௨ |
| அருள் | ௫௫௪ |
| மாமிச பக்ஷணவிலக்கு | ௫௫௭ |
| அறிவுடைமை | ௫௫௯ |
| செங்குந்தர் கிளர்ச்சி | ௫௬௧ |
| செங்குந்தவாலிபர்சங்கம் | ௫௬௪ |
| ஒட்டக் கூத்தர்திருநாள் | ௸ |
| போலிச் செங்குந்தர்கள் | ௫௬௯ |
| ஓர் சம்பாஷணை | ௫௬௯ |
| கடிதங்கள் | ௫௬௮ |
| உபகாரச் சம்பளம் | ௫௬௯ |
| நன்கொடை வரவு | ௫௭௦ |


1592 21,2 N279 208438

Vepery MADRAS

# செங்குந்த மித்திரன்

## மாதப் பத்திரிகை

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

*இதனுள் பொதுநீதிகள், அறிவை விருத்தி செய்யத்தக்க பலவியாசங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சரித்திர ஆராய்ச்சிகள், வயித்தியக் குறிப்புகள் முதலான அரும்பெரும் விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.*

*அன்றியும், முக்கியமாக செங்குந்தரின் முற்கால தற்கால வருங்கால நிலைமையை, ஆராய்ச்சியுடனும் ஆதாரத்துடனும் விளக்கமாக எழுதி வரப்படும். ஆதலால், ஒவ்வொரு செங்குந்த குலமக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர்ந்து மித்திரனை ஆதரித்து வருதல் வேண்டும்.*

### தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

| | | | |
|---|---|---|---|
| *இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு* | 1 | 8 | 0 |
| *பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு* | 2 | 0 | 0 |
| *தனிச் சஞ்சிகை ஒன்றுக்கு விலை அணா* | 0 | 2 | 0 |

### அறிவிப்பு.

நமது மித்திரன் தோன்றி 9 (ஒன்பது) மாதமாகியும் நமது சகோதரர்களில் அநேகர் சந்தாத் தொகையைச் செலுத்தாமலிருப்பது விசனிக்கத்தக்கதாக இருக்கிறது. நமது சகோதரர்களில் சிலர் மித்திரன் நடுவழியில் நழுவி விடுவானோ என்ற நோக்கத்துடன் பணம் அனுப்பாமலிருக்கலாம். மித்திரன் ஒருவரின் போஷணையில் இல்லை என்றும், ஆறு லக்ஷம் ஜனங்களின் ஆதரணையிலிருக்கின்றனென்றும் அறிந்துகொண்டு தாமதமில்லாமல் சந்தாத் தொகையை அனுப்பக் கோருகிறேன்.

V. P. யில் அனுப்பினால் சில நண்பர்கள் திருப்பிவிடுகிறார்கள். சாதாரண போஸ்டில் அனுப்பினால் பெற்றுக்கொண்டு 8 மாதஞ் சென்ற பின்னர்க் கனவு கண்டாற்போல் வேண்டாமென்று சில நண்பர்கள் எழுதி யிருக்கிறார்கள். அவ்விதம் எழுதுகிறவர் [சந்தா நம்பரைப் போடாது யெழுதுகிறார்கள்] அன்பை ஏன்னென்று சொல்லுவோம். கடிதம் எழுதுவோர் சந்தா நம்பரைக் குறித்து யெழுதுதல் வேண்டுமென எத்தனை முறையோ எழுதியும் கவனியாது தங்கள் பெயரை மட்டும் யெழுதிய கடிதங்கள் பல வந்துகொண்டிருக்கின்றன. அவைகளைக் கவனிக்க நமக்குக் கூடாமையாக இருப்பதால் இனியேனும் நேயர்கள் அன்புகூர்ந்து அவரவர்கள் யெழுதும் கடிதங்களில் பத்திரிகையின் மேல் ராப்பரிலிருக்கும் தத்தம் சந்தா நம்பரைக் குறித்து யெழுதுதல் வேண்டும். அப்படி இல்லாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

**T. N. சபாபதி முதலியார்.**

*மானேஜர்:—செங்குந்த மித்திரன் ஆபீஸ்,*

31. *அரண்மனைக்காரன் தெரு, சென்னை*

உ

முருகன் துணை

OCT 1927

# செங்குந்த மித்திரன்

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,]

மாதப் பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

| தொகுதி - க | பிரபவஹு புரட்டாசிமீ | பகுதி - ௬ |
|---|---|---|

வேலுமயிலுந் துணை

*மொய் தாரணிக்குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்*
*வைதாரையுமங்கு வாழவைப் போன் வெய்யவாரணம் போல்*
*கைதானிருபதுடையான் தலைபத்துங் கத்தரிக்க*
*எய்தான் மருகன் உமையாள் பயந்தவிலஞ்சியமே.*

---

## பத்திரிகாசிரியரின் முன்னுரை

### செங்குந்தர்களிடைக் கிளர்ச்சி.

'செங்குந்த குலமக்கள் துயிலெழுந்து விட்டனர். நெடுங் காலம் உறங்கிக் கிடந்த உத்தமர்கள் உறக்கம் நீங்கி விழித்துக் கொண்டனர். இனி நம் குல முன்னேற்றத்திற்கு யாதொரு இடையூறுமில்லை' எனச் செங்குந்தர் வதியும் கிராமங்கள்தோறும் சென்ற மாதந் தொடங்கிப் பிரசாரம் செய்து வருபவர்களும், அக் கிராமவாசிகளும், தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் மற்றையோரும் குதூகலத்துடன் கூறுகின்றனர். இடையிலே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளும் இந் நம்பிக்கைக்கு ஆதாரங் காட்டு

20837

கின்றன. அவற்றை நண்பர்கள் இப்பத்திரிகையில் செங்குந்தர் கிளர்ச்சி என்னும் தலைப்பின்கீழ் மிகவும் விரிவாகக் காண்பார்கள்.

### பிரசாரமும், கிளைச்சங்கங்களும், கூத்தர் திருநாளும்.

சைதாப்பேட்டை, மாணம்பதி, உத்திரன் மேரூர் முதலிய இடங்களில் செய்த பிரசாரத்தின் பலனை அவ்வவ்விடங்களில் கிளைச் சங்கங்கள் ஏற்பட்டிருப்பதுமன்றி, அவை தலைச்சங்கத்திற்கு ஆதரவாக நின்று அதன் விரிந்த நோக்கங்கள் நிறைவேறுதற்கு இடையறாது உழைக்க ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றன. ஒட்டக்கூத்தர் திருநாள் எதிர்பாராத பல இடங்களில் மிகவும் விமரிசையாக நிறைவேறியதன்றி, அன்றைய தினம் அநேக இடங்களில் புதுச்சங்கங்களும் நிறுவப்பெற்றன. இன்னும் அநேக கிராமங்களிலிருந்து தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்கத்தின் காரியதரிசிகளை அவ்விடங்களுக்கும் வந்து கிளைச் சங்கங்கள் நிறுவிச் செல்ல அழைத்திருக்கின்றனர்.

### வியாபாரிகளின் நிலையான ஆதரவு.

தலைச் சங்கத்தின் நோக்கங்களில் நமது குலத்தவரான வியாபாரிகள் காட்டும் பரிவு அபரிமிதமானதென்றே கூறுதல் வேண்டும். சென்னையிலுள்ள மதராஸ் பளயகாட்டுக் கம்பெனியாரும் சைதாப்பேட்டை பளயகாட்டுக் கம்பெனி வியாபாரிகளும், காஞ்சிபுரம் ஜவுளி வியாபாரிகளும் தமது குல முன்னேற்றத்திற்காக உழைக்கும் தலைச்சங்கத்தை ஆதரித்து அதற்குப் போதிய பொருள் வருவாயை நிலையாக ஏற்படுத்த வேண்டியது தமக்கேற்பட்ட தருமங்களுள்ளும் கடமைகளுள்ளும் முதன்மையானதென்பதை யுணர்ந்து, தாம் தாம் விற்கும் உருப்படிகளின் எண்ணிக்கையையோ தமக்குக் கிடைக்கும் இலாபத்தையோ அனுசரித்து மாதம் மாதம் மாமூலாக ஒவ்வொருவரும் இவ்வளவு இவ்வளவு தொகை தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்கத்திற்கு அளித்து வருவதென மனமுவந்து ஒப்புக்கொண்டமை இதற்குச் சிறந்த சான்றும்.

### பண்டிதர்களின் கூட்டுறவு.

பண்டிதர்களின் கூட்டுறவைக் கோரிச் சென்ற சஞ்சிகையில் எழுதினோம். அவ்வேண்டுகோளுக் கிரங்கிப் பல வித்வமணிகள்



இம்மாதம் விஷயதானம் அனுப்பியிருக்கின்றனர். அவர்களது ஆர்வமிகுந்த மொழிகளை அடுத்த சஞ்சிகையில் நண்பர்கள் அநேகமாகப் பருகி யானந்திப்பார்கள்.

### வாலிபர்களின் ஊக்கம்.

மூத்தோரும், படித்தோரும் குல முன்னேற்றத்திற்காக முன்வருவதோடு செங்குந்த வாலிபர்களும் இவ்விஷயத்தில் மிகுந்த சிரத்தை காட்டுகின்றனர். நான்கு நாட்கள் முடிவதற்குமுன் மூன்று செங்குந்த வாலிபர் சங்கங்கள் மயிலாப்பூரில் ஒன்றும், சென்னையிலொன்றும், காஞ்சிபுரம் பிள்ளையார் பாளயத்திலொன்றுமாகத் தோன்றி யிருக்கின்றன. மற்ற இடங்களிலும் செங்குந்த வாலிபர் சங்கங்கள் விரைவில் தோன்றும் என்பதற்குப் பல அறிகுறிகளிருக்கின்றன. வாலிபரிடையே எந்த க்ஷணம் குலாபிமானம் உதிக்கின்றதோ, அந்த க்ஷணமே அவர்கள் குலம் முன்னேறத் தலைப்பட்டு விட்டதென்றே சொல்லலாம். வாலிபர் முயற்சியால் விடுதலையடைந்த நாடுகள் பல; அவர்கள் ஊக்கத்தால் சீரடைந்த சமுதாயங்கள் அவற்றினும் பல. செங்குந்த வாலிபர்கள் குலத்தொண்டில் தலைப்பட்டுழைக்க முன் வந்திருப்பது நமது குலத்தின் பாக்கியமேயாகும். உறக்கங் கழிந்து விழிக்கும் நிலைமையிலுள்ள செங்குந்தர்களை மீண்டும் உறங்கவிடாமல் தட்டி எழுப்பவல்லவர்கள் நமது வாலிபசிகாமணிகளே. அவர்கள்பொறுப்பில் தான் நம் குலத்தின் மேன்மை தழைக்க இருக்கின்றது.

ஒரு மாதத்தில் தோன்றிய இவ்வளவு கிளர்ச்சியும் என்றும் தளராது மேலும் மேலும் பலவிடங்களிலும் பரவி நமது குலம் சீரடையும் வண்ணம் இறைவனருள் புரிவானாக.

பத்திரிகாசிரியர்.

---

## ஆராய்ச்சிப் பகுதி.

### சிதம்பரத்துச் செங்குந்தர்களின் சிறப்பு.

மாதவஞ்செய்த தென்திசையில் வெள்ளாற்றின் சமீபமாகவுள்ள திருத்தூங்கானை மாடமெனும் திருக்கோயில் அமையப்

பெற்றத் திருப்பெண்ணாகடம் எனும் திருப்பதியில், பிராமண குலத்தில் வேதவாம்பு கெடாமல் ஆகமப்பயிர் செழிக்கவும், ஞானம் பழுக்கவும், நம் பண்டைத் தவப் பேற்றால் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். தாயுந் தந்தையரும் மனக்களிப்படைந்து வேத விதிப்படி சாதககன்ம முதலிய வினைகளை முடித்து அவருக்கு ஏழு வயது வந்ததும் உபநயனச் சடங்கு செய்தார்கள். அவர் அவதரித்த மரபுக்கியைய நான்கு வேதம், ஆறு அங்கம், இருபத்தெட்டு ஆகமம், பதினெண்புராணம், அறுபத்து நான்கு கலை முதலியவற்றை ஐயந்திரிபு அற ஓதிய முறையால் அவர் மறைஞான சம்பந்த சிவாசாரியரெனத் திருநாமஞ் சூட்டப்பெற்றனர். இவ்வாறொழுகுங்கால் அவர் தம்முடைய பிறவியை வேரறக் களைதற்பொருட்டு ஞானோபதேசஞ்செய்து கொளல் வேண்டுமென அவாவி அருணந்தி சிவாசாரிய சுவாமிகளை அடைந்து அவரடியிற் றாழ்ந்து பணிந்து, ‘அடியேனை அநாதியாகப் பற்றியுள்ள ஆணவமலம் நீங்கி முத்திப்பேறடைய, தேவரீர் திருவடி தீட்சை செய்தருளல் வேண்டு’ மென விண்ணப்பஞ் செய்து நின்றார். அருணந்தி சிவாசாரியார், தன்னடி பணிந்து நிற்கும் மறைஞான சம்பந்த சிவாசாரியாரை உச்சிமுதல் உள்ளங்கால் வரை தன்னருட் கண்ணினால் உற்று நோக்கித் திருவடி தீட்சை செய்து சிவஞான போதத்தையும் உபதேசித்து அனுக்கிரகம் செய்தார். அதன் பின்பு மறைஞான சம்பந்த சிவாசரியார், தரிசித்த மாத்திரத்திலேயே முத்தியைத் தரவல்லதும் இருதயத் தலமானதுமாகிய சிதம்பரத்தையடைந்து ஆங்கு பக்குவமடைந்த பல மாணாக்கருக்கு ஞானசாத்திரத்தை யுபதேசஞ் செய்து கொண்டிருந்தார்,

அதுபோது (460 வருடங்களுக்குமுன்) தில்லைவாழ் அந்தணர் குலத்தில் ஓர் தீட்சதர் புத்திரப் பேறின்றி வருந்த, ஸ்ரீ நடராஜப் பெருமானது இன்னருளால் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். அப்புத்திரர் உமாபதி சிவாசாரியரென நாமஞ் சூட்டப் பெற்று வேத விதிப்படி சாதககன்ம முதலிய சடங்குகள் முடிந்து ஐந்தாம் வயதில் பள்ளிக்கு அனுப்பப் பெற்று, ஏழாம் வயதுக்குள் சென்ம உணர்ச்சியால்,

“ஒருமையிற்றான் கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து”



எனும் திருவள்ளுவர் கருத்துக்கிசைய சகல கலைகளையும் வேத சிவாகமங்களையும் வெகு விரைவிற் பயின்றவரானார். இவரது தந்தையார் தம் மைந்தரது அறிவின் திறத்தையுணர்ந்து உபநயனச் சடங்குகளைப் பூர்த்தி செய்வித்தார். பின்பு உமாபதி சிவாசாரியார் சமயதீட்சை பெற்று விளங்கி வருங்கால் பதினான்கு வயது நிரம்பித் பொன்னம்பலத்தின் கண் “சிற்சபை பொலிய அற்புதத் தனிக் கூத்தாடும்” ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தீண்டிப் பூஜிக்கும் பக்குவநிலை அடைதலும், நடராஜபெருமானைக் காலந்தவறாது பூஜித்து வருவதோடு, கோயிற் புராணமும் இயற்றினார். விருதுடன் வழக்கம்போல் பல்லக்கில் ஆரோகணித்துச் சென்று இறைவனைப் பூஜித்துவரும் நாட்களில் ஓர் நாள், திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருக்கும் மறைஞான சம்பந்த சிவாசாரிய சுவாமிகள் ஓர் தெருத்திண்ணையின் மேலிருந்து தமது மாணாக்கர்களுக்குச் சைவ சித்தாந்த ஞான சாத்திரத்தை அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்பப் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும் போது, ஒரு மாணவர் எழுந்து தனது ஞானாசிரியரை வணங்கி, உமாபதி சிவாசாரியரைக் காட்டி, இவ்வைகாசி மாதக் கொடும் வெயிலில் தீவர்த்தியுடன் சிவிகையில் பல விருதுகளோடு சகல ஆடம்பரத்துடனே யாரோ ஒரு தீட்சதர் செல்லுகின்றாரெனத் தாழ்மையோடு சொல்ல, மறைஞானசம்பந்தசிவாசாரியார் ‘அவர் ஒரு பகற்குருடர்’ என்று மறுமொழி யுரைத்தனர். அச்சொல் பல்லக்கிற் செல்லும் உமாபதி சிவாசாரியார் செவியிற் பசுமரத்தாணிபோற் பாய்ந்தது. உடனே பல்லக்கினின்றுங் கீழே குதித்து மறைஞான சம்பந்த சிவாசாரியார் இருக்கும் இடத்திற்கு மிகுந்த பயபக்தியோடு எட்டுறுப்பு நிலந்தோயும்படி வணங்கவரும் காட்சியைக் கண்ட மறைஞான சம்பந்த சிவாசாரியார், ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தீண்டிப் பூஜித்து அனேக விருதுடன் வரும் உமாபதி சிவாசாரியர் நம்மை வணங்கவருங் காரணம் யாதோ வென்று நினைத்து தாம் இருந்த விடத்தை விட்டெழுந்தோடினார். உமாபதி சிவாசாரியரும் பின்தொடர்ந்து ஓடினார்.

இரண்டு சைவ சிகாமணிகளும் முன்னும் பின்னுமாக ஓடிக் கடைசியாகச் சிதம்பரத்தில் செங்குந்தர் வீதியை யடைந்து அங்கு பாவு தோய்ந்துகொண்டிருந்த ஒரு செங்குந்தரைப் பார்த்து

மறைஞானசம்பந்தசிவாசாரியர், 'அன்ப! எனக்கு மிகவும் இளைப்பாயிருக்கிறது. அவ்விளைப்பு நீங்க நீங்கள் பாவு தோயும் கஞ்சியை வார்க்க வேண்டு'மென உமாபதி சிவாசாரியரது பக்தித் திறத்தைச் சோதிக்கும்பொருட்டுக் கேட்டருளினர். அங்குள்ள செங்குந்த சிகாமணிகள் சிவபெருமானிடத்து மிக்க பக்தியும், அடியார் திறத்து அன்புங் கொண்டுள்ள புண்ணியசீலராகையால், பயபக்தியோடு மறைஞானசம்பந்தசிவசாரியரையும், உமாபதி சிவாசாரியரையும் வணங்கி, அப்பெரியாருக்கு நல்ல திருவமுது படைக்க வேண்டுமெனக் கருதி, 'சுவாமி, அடியேங்களுடைய இல்லிற்கெழுந்தருளினல், அறுசுவையோடு அன்னம் படைக்கின்றோம்; வரவேண்டு'மெனப் பணிய, அதற்கு மறைஞானசம்பந்த சிவாசாரியார், 'நீங்கள் பாவு தோயும் உப்பில்லாக் கூழையே படைத்தால் களைப்பு நீங்கு'மெனத் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வமயம் தாம் பாவு தோயக்கொண்டு வந்திருந்த "உப்பின்றி அட்ட புற்கைக்" கூழை எடுத்து மறைஞான சம்பந்த சிவாசாரியரது இரண்டு கரங்களிலும் வார்த்தனர். அக்கூழைப் பரிவோடு உண்ணும் மறைஞானசம்பந்தசிவாசாரியரது இரண்டு முழங் கைகளிலும் அக்கூழ் ஒழிகிற்று. அதுபோது உடனிருந்த தில்லை தீட்சதராய உமாபதி சிவாசாரியார் ஒழுகிய உச்சிட்டம் பூமியிற் சிந்தாவண்ணம் தமது இரண்டு கரங்கொண்டு ஏற்றுக் குருபிரசாதமாக அதைத் தாமுட்கொண்டார். இத்தன்மையால், மறைஞான சம்பந்த சிவாசாரியர் ஞான குருவாகவும், உமாபதி சிவாசாயார் மாணவருமானர்கள். இதையறிந்த மறைஞானசம்பந்த சிவாசாரியார் உமாபதி சிவாசாரியருக்கு ஞானோபதேசஞ் செய்து சிலநாள் தங்கியிருந்து பிரிந்தகன்றுவிட்டனர்.

இவர்கள் செங்குந்தர் பாவு தோயும் இடத்திற் சென்றது யாதாலோவெனில், இக்குலத்தவர் ஆதிசைவராதலினாலும், சிவபரம்பரையினராகையாலும், முருகக்கடவுளுக் கிளையரான வீரவாகு வம்சத்தவராகையாலும், இவர் மேற்கொண்டொழுகுந் தொழில உலகிலுள்ளோர் மானத்தைக் காப்பதும், பாவமற்றது மாயிருத்தலாலும்,சிவாலயங்களிற் கொடியேற்றுவதற்குக் கொடிக் கயிறு, கொடிச்சீலை முதலியஉதவும் சிவபுண்ணிய சீலர்களாகையாலும் என்றுணர்க. மதுரைப் புராணத்துள்,

> "கோக்களை மன்னனைத் தவத்தரைக் குலத்தில் வேத
> மாக்களைச் சிசுவைக் கொன்றான் செய்நன்றி மறந்தானுசான்
> ஆக்க மதழித்தான் பாவமனைத்துஞ் செங்குந்தர் வீதி
> தேக்கிடப் பிச்சைவாங்கி யுண்டிடத் தீருமன்றே."

எனக் கூறியுள்ளார்.

இனி, இவ்விஷயங்களை யுணர்ந்த தில்லைத் தீட்சதர்கள், உமாபதி சிவாசாரியார் ஸ்ரீ நடராஜப்பெருமானைத் தீண்டி பூஜிக்



கக் கூடாதென மறுத்ததன்றி, அவர் இயற்றி அருளிய கோயில் புராணத்தை அரங்கேற்றக் கூடாதெனத் தடுத்து ஜாதிப் பிரஷ்டமும் செய்தார்கள். இதை அறிந்த உமாபதி சிவாசாரியர் தில்லைக்குக் கீழ்ப்புறமுள்ள கொற்றவன் குடியென்னும் திருப்பதியில் மடமொன்றியற்றி அதில் அநேக சிவனடியாரோடு வசித்து வந்தார். இப்பால், "பொய்கண்டார்காணுப் புனிதமெனு மத்துவித மெய்கண்ட சிவாசாரியருக்கு" ஓர் வித்தாயிருந்து சில சித்தாந்த சாத்திரங்க ளியற்றியும், அச்சாத்திரங்களை நன் மாணுக்கர்களுக்கு உபதேசஞ் செய்தும், சிவயோக நிஷ்டையிலிருந்தும் வந்தனர்.

இது நிற்க, சிதம்பரம் பொன்னம்பலத்தின்கண் எழுந்தருளியிராநின்ற சபாநாதருக்கு ஆனித்திருமஞ்சன பிரமோற்சவதுவஜாரோகணம் நெருங்கவும், அதுபோது உமாபதி சிவாசாரியார் முறையாதலால், அவர்க்குப் பதிலாக வேறொரு தீட்சதரை நியமித்து அவரைக் கொண்டு துவஜாரோகணம் செய்ய எத்தனித்தனர். அக்கொடியானது ஏறாது கீழே அறுந்து விழுந்துவிட்டது. அதைக் கண்டுமீண்டும் பல தடவை முயன்றும் கொடிச்சீலை யேறாமலறுந்து விழுவது கண்டதனல், அங்கிருந்த தீட்சதரும் மற்றைய அடியார் கூட்டங்களும் மனஞ்சாம்பிப் பெருமான் சன்னதியில் கொடியேறத் தவக்கப்படுங் காரணம் யாதோ, உலகத்திற்கு என்னகேடு விளையுமோ எனப் பயந்து ஸ்ரீநடராஜப் பெருமானை உள்ளன்போடு தியானித்து மெய்ம் மறந்தபோது, ஸ்ரீ நடராஜப் பெருமான், ஆன்ம கோடிகளிடத்து வைத்த கைம்மாறற்ற பெருங்கருணையால் அவர் அகத்தின்கண்ணே மானிட வடிவமாகத் தோன்றி, 'எமது மெய்யன்பனை கொற்றவன்குடியிலுள்ள உமாபதி சிவத்தினது பூஜைப் பெட்டகத்திலிருக்கும் கோயிற் புராணத்தின் கண்ணே நாம் எழுந்தருளியிருக்கின்றோம். அவரை யழைத்து வந்து துவஜாரோகணம் நடத்தினல் தான் கொடியேறும்' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

அங்கு குழுமியிருந்த தீட்சதர் யாவரும் கனவு கண்டவர் போல் விழித்துத் தேகம் புளகாங்கிதம் கொண்டு, மனந்திகைப் புற்று, ஒன்று சேர்ந்து, சிதம்பரத்திற்குக் கீழ்ப்பாலுள்ள கொற்றவன்குடி மடத்திற்கு விருதுகளுடன் இரத்தின கசிதமாய் விளங்கும் பல்லக்கோடு புறப்பட்டுப் போய், அவண் எழுந்தருளியிருந்த உமாபதி சிவாசாரியரை வணங்கி நிற்க, உமாபதி சிவாசாரியர் தம்மிடம் வந்த தீட்சதர்களை மிக்க வினயத்தோடு திருநோக்கஞ்செய்து, 'நீங்கள் அடியேனிடம் வரக் காரணம் யாதோ' என, தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரத்தின் கண் நடந்த விஷயங்களைக் கூறித் 'தாங்கள் வந்தாலொழிய துவஜாரோகணம் நடைபெறாது. நாங்கள் கொண்டுவந்துள்ள சிவி

கையில் ஆரோகணித்து எழுந்தருள வேண்டு'மெனக் கேட்க, உமாபதி சிவாசாரியார், 'இதுவும் எனையடிமையாகக் கொண்ட அம்மானுபெம்மான் அருள்போலும்' எனப் பரவசமாய்ப் பேரானந்தப் பெருங் கடலுட்டிளைத்துத் தீட்சதர்கள் கொண்டுவந்துள்ள இரத்தின கசிதமான பல்லக்கில் பூஜைப் பெட்டகத்தை வைத்துத் தாம் பாதசாரியாய் நடந்து ஸ்ரீ நடராஜப் பெருமான் எழுந்தருளியிராநின்ற ஆலயத்துட்புக்கு நின்றார்.

இக்கொடியேறும் உற்சவமானது திரியம்பகனென்னும் அரசனால் அதுவரை நடந்துவந்தது. இப்போது நடக்கத் தவறியதால் அரசன் கவனித்து இஃது யாருடைய குற்றமென உணராது நிற்க, உமாபதி சிவாசாரியார் 'எனது பரமாசாரிய மூர்த்திகளுக்கு அமுதளித்த குற்றமற்ற சிவகாருணியமுடைய மேன்மைதங்கிய செங்குந்தரை வரவழைக்க வேண்டு'மெனக் கூறினார். உடனே அங்குள்ளவர்கள் சிதம்பரம் செங்குந்த கோட்டத்திற்கோடிச் செங்குந்தர்களை அழைத்து வந்துவிட, அவர்கள் உமாபதி சிவாசாரியாரைத் தரிசித்து எட்டுறுப்பும் நிலந்தோய பூமியில் விழுந்து வந்தனை செய்து நிற்க, அவர்களை உமாபதி சிவாசாரியார் 'பார்த்து' மெய்யன்பர்களே இப்போது ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு நடக்கும் ஆனித்திருமஞ்சனப் பிரமோற்சவத்தில் கொடி யேற்றுவதற்கு நீங்கள் கொடிச்சீலை கொடிக்கயறு முதலியவற்றை இப்போது உதவுதல் வேண்டும்' என்று கட்டளையிட்டார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டுசெங்குந்தர்கள்கொடிச்சீலைகொடிக்கயிறுமுதலியவற்றைத் தயார்செய்துகொண்டு வீதிப்பிரதக்ஷணம் செய்துவந்து ஆலயத்து எழுந்தருளியிருந்த உமாபதி சிவாசாரியர்முன்வைத்தார்கள். அதை விதிப்படி பூஜித்து மந்திரபூர்வமாக ஏற்றுக் கொடிக்கவிபாடிக் கொடியேறும் உற்சவத்தை நிறைவேற்றினார். அன்று தொட்டு இதுவரை சிதம்பரம் செங்குந்தர்களே ஆனித்திருமஞ்சன கொடியேறும் உற்சவத்தை செய்து வருகின்றனர்.

**தி. அ சண்முக முதலியார்.**

குறிப்பு:—இதுகாறும் கூறிய சந்தானாசாரிய புராண சரித்திரத்தை இலங்கை காரவெட்டி கிழக்கிலிருந்து எங்களது பார்வைக்கு அனுப்பி உள்ளார். அதிலுள்ள சொற்பொலிவையும் இனிய தமிழ் நடையையும் கண்டு களித்தோம். இப்புத்தகத்தைப் பொதுவாகத் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஆதரிப்பதல்லாமல், சிறப்பாகச் செங்குந்த குலமக்கள் வாங்கிப் போற்றவேண்டும் இப்புத்தகத்தை யியற்றியவர் உயர்திருவாளர் க. பொன்னம்பல உபாத்தியாயராவர்.

இதன் விலை 25-சதம்,

கிடைக்கும் விலாசம்:—க. போன்னம்பல உபாத்தியாயர்,
காரவெட்டி, கிழக்கு, இலங்கை.



# விரதப் பகுதி.

## நவராத்திரி

### விரதத்தின் பெயர்களும் அவற்றின் காரணங்களும்.

இவ்விரதமானது, ஒன்பது இராத்திரியில் செய்யப் பெறுவதாகலின் **நவராத்திரி** யென்றும்; பத்தா மிராத்திரியாகிய தசமியையும் சேர்த்துச் செய்வதனால், **தசரா** வென்றும்; துர்க்கை, இலக்ஷுமி, சரஸ்வதியாகிய முச்சத்திகளுள் துர்க்கை முதல் மூன்று நாட்களிலும், இலக்ஷுமி இரண்டாவது மூன்று நாட்களிலும், சரஸ்வதி மூன்றாவது மூன்று நாட்களிலும் பூஜிக்கப் பெற்றுச் சரஸ்வதி பூஜையைக்கொண்டு முடிவு பெறுதலின் **சரஸ்வதி பூஜை**யென்றும்; உலகத்தை ஒடுக்கி மறுபடியும் தோற்றுவிக்கும் சம்மார கர்த்தாவாகிய சிவபெருமானது பிரதான சத்தியாகிய காளியினது போர்க்குரிய ஆயுதங்களைப் பூஜித்தலின் **ஆயுதபூஜை** யென்றும்; பாண்டவர்கள், பன்னிரண்டு வருஷங்கள் வனவாசஞ்செய்து உடன்படிக்கைப்படிப் பதின்மூன்றும் வருஷம் யாருமறியாதவாறு வசிக்க வேண்டியிருத்தலின், விராட நகரத்திற்கு வெளிப்புறத்திலிருந்த ஒரு வன்னிமரப் பொந்தில் எவருமறியாதபடித் தங்கள் ஆயுதங்களை மறைத்துவைத்துத் தாம் உருமாறி விராடநகரில் வசித்து வந்தபோது, அவர்கள் விராட நகரிற்றான் மறைந்திருத்தல் வேண்டுமென ஐயுற்ற துரியோதனன், ஆண்டு அவரிருப்பதுண்மையாயின் விராடர்மீது போர்க்குச் சென்றால் அவசியமாக வெளிப்படுவர் எனக் கருதிப் படை சேர்த்துச் சென்று விராடர் ஆநிரையைக் கவர்தலும், பேடியெனவிருந்த விஜயன் உத்தர குமாரனுக்குச் சாரதியாய் வந்து போர் செய்ய நேர்ந்ததால், முன்னர்த் துர்க்கையம்மன் கோயிலின்முன்னிருந்த வன்னிமரப் பொந்தில் வைக்கப்பெற்றுள்ள ஆயுதங்களைப் பூசித்து எடுத்து உபயோகித்துத் தான் ஒருவனே அவ்வணிவகுத்த பெரும் படையோடு வந்திருந்த துரியோதனாதியரைப் புறங்கொடுத்தோடச் செய்த நாள் புரட்டாசி சுக்கிலபக்ஷ தசமியாகலின் * **விஜயதசமி** யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

* விஜயதசமியானது, மரணயோகம், கரிநாள் முதலிய தோஷங்களை உடையதாயினும், அவற்றைத் தோஷமாகக் கருதாது எவ்வகைச் சுபகாரியங்களையும், செய்யலாம்.

## விரத வரலாறு.

முன்னொரு காலத்தில் கௌசல தேசத்தில் மிகத் தரித்திரனும் ஆசாரபரனுமான ஒரு வைசியனிருந்தான். அவன் "**வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை**" என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாக விருந்தானாயினும், இவ்வுலக வாழ்க்கைக்கும் தன் குலதர்மத்திற்கும் இன்றியமையாத வேண்டற்பாலதாகிய பொருளின்றி வறுமையால் பீடிக்கப்பெற்றமையால் பல்பகல் வருத்தமுற்றிருந்தானாக ஒருநாள், அந்தண்மைபூண்டு அருமறையந்தத்துச் சிந்தை செய்வோராகிய ஓர் உத்தம அந்தணரைக் கண்டு மனமகிழ்ந்து எதிர்கொண்டு, இன்முகங்காட்டி, இன்மொழி கூறி, அர்க்கிய முதலிய விதிப்படி வழங்கி உபசரித்து, ஒரு பொற்பீடத்திருத்தி, 'ஐயரே! தேவரீர் தரிசனம் அடியேனுக்கின்று கிடைக்கப்பெற்றது யான் பலஜென்மங்களிற் செய்த தவப்பயனோ? அன்றி, என் முன்னோர் செய்த தவப்பயனோ?' வெனப் பலவாறு துதித்து அடிபணிந்து எதிரில் நின்று, 'அடியேன் பல பகீரதப்பிரயத்தனம் பல்கால் செய்தும் இன்னுதவற்றுள் இன்னாததாய இன்மையானது அடியேனை விட்டகலாத காரணம் யாதோ அறிவித்தல் வேண்டும்' என இரந்து நிற்க, "**உரனென்னுந் தோட்டியால் ஓரைந்துங் காத்த**" வராகிய அந்தணர் மனமிரங்கி ஆசீர்வதித்து, 'உத்தமகுணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற வைசியகுல தீபமே! ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படுதற்குக் காரணமான நல்குரவை நீ யடைந்தவாற்றையும் அதைப் போக்கு மாற்றையும் கூறுவோம். கவனித்துக் கேட்பாயாக' என்று கட்டளையிட்டுச் சொல்லத் தொடங்கினார்:—

## விரதச் சிறப்பு.

"முதலாவதாக 'ஜெகம் சத்திமயம்' என்னும் உண்மையை நீ அறிந்து கொள்ளவேண்டும். நவராத்திரிச் சிறப்பைக் கூறிய பின்னர் ஜெகம் சத்திமயம் என்பதை விளக்கமாகச் சொல்லுவோம். உலகத்தில் நாம் அடையும் செல்வம் முதலிய போகங்கட்கு அதிகாரி சத்தியேயாம் என்பதை அறிந்து முற்பிறப்பில் சத்தியைப் பூஜித்தவர்களே இப்பிறப்பில் நிறைந்த செல்வத்தை யடைகின்றார்கள். இதுபற்றியே "**மேலைத் தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்**" என்றார் பெரியாரும். செல்வத்திற்



கேதுவாகிய சத்திபூஜையை நீ முற்பிறப்பிற் செய்தாயில்லையாகவே, ஈண்டுவறுமை யடைந்தாயென்று அறிவாயாக. ஆயினும், இம்மையிலேயே வேண்டிய செல்வத்தைத் தருவல்ல "நவராத்திரி" என்னும் ஒரு விரதமுண்டு. அதை அனுஷ்டிக்கவேண்டிய முறையையும் சொல்லுகிறேன்" எனச் சொல்லுவாராயினர்.

"பரசிவத்தினின்றும், அபின்னமாய் முக்குணரகிதமாய் விளங்கும் பராசத்தியினின்றும் தோன்றிய பல்வகைச் சத்திகளுள் முக்கியமானவை மூன்று; அவை துர்க்கை, இலக்ஷுமி, சரஸ்வதி என்பனவாம். இம்மூன்று சத்திகளையும், புரட்டாசி மாதம் சுக்கிலபக்ஷம் பிரதமை தொடங்கி நவமிவரையில், ஒவ்வொரு சத்திக்கும் முறையே மும்மூன்று நாட்களாகப் பகிர்ந்து, ஸ்தம்பம் (குண்டமண்டலம்), கும்பம் (கலசம்), பிம்பம் (உருவம்) ஆகியவற்றால் பூஜித்தல் வேண்டும். செய்வோன் சத்திக்கேற்றவாறு விரதங்கள் நியமித்துக் கொள்ளலாம். மேற்கூறிய மூன்றுவிதமாகவும் செய்யவியலாதார், கும்பம் பிம்பம் ஆகிய இரண்டினாலாவது, அல்லது இரண்டனுள் ஒன்றினாலாவது பூஜித்தலும் அமையும்.

"எவ்வாறு மும்மூர்த்திகளுக்கும் செய்யும் பூஜையானது அதீதநிலையில் சதுர்த்தமாய் முக்குணரகிதமாய் விளங்கும் பரசிவத்திற்குரியதாகிறதோ, அவ்வாறே முச்சத்திகளுக்கும் செய்யும் பூஜையானது பராசத்தியையே அடையும் என்றுணர்வாயாக. ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு நவமிகளாக ஒரு வருஷத்தில் 24 நவமிகள் உண்டெனினும், இந்நவமியானது பராசத்திக்குரியதாகலின் இதற்கு 'மகாநவமி' யென்றும் பெயர்.

"சதுர்த்தமாகிய பராசத்தியையே மஹாதேவி, மஹாலக்ஷ்மி, மஹா சரஸ்வதி (துர்க்கை, இலக்ஷுமி, சரஸ்வதி ஆகிய மூவர்க்கும் செய்தது பராசத்திக்கேயுரியதென்பதுணர்த்த) எனப் பெயரிட்டு மேற்கூறியவாறு ஒன்பது ராத்திரி பூஜிப்பதே உசிதமெனக் கொள்வாருமுளர்.

"சத்தி பெண்ணுருக் கருதப்படுதலால் இரண்டு வயதுக்கு மேல் பத்து வயதுக்குட்பட்ட கன்னிப்பெண்களைச் சத்தியாகப் பாவித்து, ஒன்பது நாட்களிலும் ஒவ்வொரு நாளுக் கொவ்வொரு

பெண்ணாகப் பூசித்து அவர்களுக்கு வேண்டிய உணவு ஆடையாபரணங்கள் வழங்குவது முண்டு. (இது பெரும்பாலும் தற்காலத்தில் அனுஷ்டானத்திலில்லை).

இனி நவராத்திரி எவ்வாறு சத்தி பூஜைக்கு மிகச் சிறந்த காலமென்பதைக் கூறுவாம்.

## நவராத்திரியே சத்திக்குச் சிறந்த காலம்.

“அனந்த சத்திகளுள் காலசத்தி யென்பதொன்று. சரத்காலம், வசந்தகாலம் ஆகிய விரண்டும் அக்காலசத்திக் கோர தந்தங்களாம். அவற்றால் உயிர்களுக்கு நோய் முதலிய துன்பங்களுண்டாம். அஃதாவது சரத்காலத்தில் உணவுப் பண்டங்களின் குறைவினாலும், வசந்தகாலத்தில் அவற்றின் மிகுதியினாலும், உயிர்கட்குத் துன்பமுண்டாம். துன்ப நிவர்த்திக்காக இவ்விருகாலங்களிலும் சத்திபூஜை செய்தல் வேண்டுமெனினும், வசந்தகாலத்தில் இன்பப்பொருள்களின் மிகுதியாலுண்டாகும் நோய் முதலியவற்றை ஒருவாறு சகித்துக் கொள்ளவுங் கூடுமாகையால், சரத்காலத்தில் பொருட் குறைவாலுண்டாகும் துன்பத்தை நிவர்த்திசெய்வது கூடாதாகலின் அது சத்திபூஜை செய்தற்குரிய காலமென்றறிக.

“சிவ பரம்பொருளுக்கு அவிகொடாது ஆவிகொடுத்தானாகிய தக்ஷப்பிரஜாபதியின் யாகத்தை யழித்தற் பொருட்டு வீரபத்திர மூர்த்திக்குத் துணையாயிருந்த பத்திரகாளியானவள் புரட்டாசி சுக்கிலபக்ஷ அட்டமியிற் றோன்றி தக்ஷயாகத்தை அழித்துப் ‘பத்திரகாளி புவனம்’ என்னும் புவனத்தையும் பெற்றாளாகலின், ஒன்பது நாட்களிலும் இவ்விரதத்தை அனுஷ்டிக்க வியலாதார் அஷ்டமியை விசேஷமாகக்கொண்டு அன்று துவக்கி நவமியன்று பூர்த்திசெய்வது முண்டு.

“இரண்டு நாட்களிலுங்கூடச் செய்ய வியலாதார் நவமியன்றாவது துர்க்கைக்குரிய ஆயுதங்களையும், இலக்ஷ்மிக்குரிய பொன் பணம் தொழிற்கருவி முதலியவற்றையும், சரஸ்வதிக்குரிய சுவடிகள் முதலியவற்றையும் வைத்துச் சத்திக் கேற்றவாறு பூசித்தல் வேண்டும்.

“சூரியமண்டலம் சிவபெருமானுக் குரியதும் சந்திரமண்டலம் சத்திக்குரியது மாதலால், சூரியனுக்குரிய பகல்சிவத்துக்குரியதென்றும், சந்திரனுக்குரிய இரவு சத்திக்குரியதென்றும்



மேலோர் சொல்லுவர். ஒரு சமயம் சிவபெருமான் அம்மையாரை நோக்கி, ‘உனக்குரிய இரவில் ஒன்றையாவது எமக்குத்தரவேண்டுகின்றோம்’ எனத் தாம் உயிர்களிடத்து வைத்த பெருங் கருணையினால் கேட்க, அம்மையார் ஆண்டவரை வணங்கி, ‘சுவாமிகளே, அடியேனுக்குரிய இராக்காலத்தைத் தரப் பிரியமில்லாமலிருந்தாலும், தேவரீர் கட்டளையை மறுக்கக்கூடாதாகையால், உமக்குரிய பகலில் ஒன்பதை அடியேனுக்குத் தந்தருளுவீராயின் அடியேன் ஓரிரவு தருகிறேன்’ என்று சொல்லப் பெருமானு மிசைந்து நவராத்திரிக்குரிய ஒன்பது பகலையும் உரித்தாக்கினாராகலின், நவராத்திரி காலத்தில் ஒன்பது இரவேயன்றி பகலும் சத்திக்குரியனவாயின. (அம்மையார் சிவபிரானுக்குக் கொடுத்த இரவே சிவராத்திரியாகும்.)

## மகிடாசுர சம்மாரம்.

“மகிடாசுரன் என்போன் எல்லா உலகங்களையும் வென்று கொடுங்கோல் நடத்திவந்தபோது, தேவேந்திரன் முதலிய தேவர்கள் பிரமனை யழைத்துக்கொண்டு சங்கரரும், விஷ்ணுவும் இருக்குமிடஞ்சென்று மகிடாசுரனால் தங்களுக்குண்டாயிருந்த துன்பங்களைக்கூறித் தங்களைக் காக்கும்படி வேண்டிக் கொண்டபோது, விஷ்ணு, உருத்திரன், பிரமன் முதலிய எல்லாத் தேவர்களுக்கும் அடங்காத கோபமுண்டாயிற்று. இவ்வாறு யாவரிடத்து முண்டாகிய கோபாக்கினியானது ஒளிரூபமாய் வெளியே வந்தது. அவற்றுள் ஆயிரஞ் சூரியப்பிரகாசமுள்ள சம்புவினொளி முகமாகவும், யமனுடைய வொளி தலைமயிராகவும், விஷ்ணுவினுடைய வொளி கைகளாகவும், சந்திரனொளி தனங்களாகவும், இந்திரனொளி இடையாகவும், வருணனொளி முழந்தாள்களாகவும், பூதேவியினொளி நிதம்பமாகவும், பிரமனொளி பாதங்களாகவும், சூரியனொளி கால்விரல்களாகவும், வசுக்களொளி கைவிரல்களாகவும், குபேரனொளி நாசியாகவும், பிரஜாபதியினொளி பற்களாகவும், அக்கினியினொளி மூன்று கண்களாகவும், சாத்தியர்களொளி இரண்டு புருவங்களாகவும், வாயுவினொளி இரண்டு காதுகளாகவும், ஆயின. இவ்வாறு எல்லாத் தேவர்களிடமு மிருந்து வெளிப்போந்த ஒளிகளே ஒருருவாய் மகிஷனைச் சம்மரிக்க மஹாதேவி, மஹாலக்ஷ்மி, மஹா சரஸ்வதி யென்னும் பெயர்களுடன் தோன்றினள். பிறகு சிவனார் சூலமும், விஷ்ணுமூர்த்தி சக்கரமும்

வருணன் சங்கமும், வாயு வில்லும் பாணமும், இந்திரன் வஜ்ஜிரமும், ஐராவதம் கண்டாமணியும், யமன் கால தண்டமும், சூரியன் காந்திமாலையும், ஆக ஒவ்வொரு தேவரும் ஒவ்வொரு கருவி கொடுத்து மகிடாசுரனைக் கொல்லவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். தேவி மகிழ்ந்து மகிஷனோடு யுத்தஞ் செய்வதற்கு வர, அவன் சிக்ஷுரன், துர்த்தரன், துன்முகன், பாஷ்கலன், தாம்பிரகன், பிடாலன் முதலானவர்கள் சூழ எதிர்த்துவந்து போர்செய்தான். தேவி அவர்கள் யாவரையும் கொன்று மகிஷனையும் பாசத்தினாற்கட்டித் கத்தியினால்தலையை வெட்டித் தொலைத்தனள். அதைக்கண்ட தேவர்களெல்லாம் தேவியைப் போற்றி வாழ்த்தினர். இம்மகிடாசுர சம்மாரம் நடந்ததும் தசராகாலமே. அதனாலும் இஃது சத்தி பூஜைக்குகந்த காலமென்றுணர்க.

“இந்த நவராத்திரி விரதத்தை மனோவாக்குக்காயம் என்னும் திரிகரண சுத்தியாய்ப் பக்தியோடு அனுஷ்டிப்போர், அஷ்ட ஐஸ்வரியத்தையும் இம்மையிலேயே பெற்று, மறுமையில் அந்தமிலின்பத்து அழிவில் வீட்டை அடைவர் என்பது திண்ணம் என அந்தணர் சொல்லக் கேட்ட வைசியன், மறுபடியும் அவரை வணங்கி, “என் செல்வமே! தேவரீரது இந்நாபதேசத்தைக்கேட்டுப் புனிதனானேன். ஆயினும் அதனிடத் தடியேனுக் குண்டாயிருக்கும் சிரத்தையானது ஸ்திரம்பெறும் பொருட்டு, இத்தகைய அரிய விரதத்தை முன் அனுஷ்டித்துப் பயனடைந்தவர் யாவர் என்பதை அடியேனுக் குணர்த்துதல் வேண்டும்” என அடிபணிந்து இரக்க, முனிவர் சொல்லுவாராயினர்:—

‘சக்கரவர்த்தி திருமகனாகிய இராமபிரான், வாலியை வதஞ்செய்த பிறகு, வருஷகாலம் கழித்துச் சரத்காலத்தில் சீதையைத் தேடப் பிரயத்தனம் செய்வதாக வாக்களித்த சுக்கிரீவன் வாளாவிருத்தலைக் கண்டு, இராஜ்ஜியத்தையேயன்றி மனைவியையும் இழந்து துயருழந்து நின்ற தருணத்தில் நாரதமுனிவர் தோன்றிப் பல இனியவசனங்கள் கூறி ‘உமக்கிப்போதுண்டாயிருக்கும் துன்பம் நிவர்த்தியாக வேண்டுமாயின் நவராத்திரி யென்னும் அரிய சத்திவிரதத்தை அனுஷ்டிப்பீராக,’வெனக்கூறி அவ்விரதத்தை அனுஷ்டிக்கும் முறையையும் உபதேசித் தருளினர். அவ்வாறே இராமபிரான் நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்ததன்



பயனாகச் சீதாபிராட்டி இருக்குமிடத்தையறிந்து இராவண சம்மாரம் செய்து பிராட்டியையும் சிறையினின்று மீட்டுத்திரும்பி அயோத்தியை அடைந்து முடிசூடி அரசாண்டுவந்தார்” என உதாரணங் காட்டியருளினர். வைசியனும் இவ்விரதத்தைத் தவறாது அனுஷ்டித்து மிகுந்த செல்வத்தைப் பெற்று வாழ்ந்திருந்தான்.

இவ்விரத வரலாற்றை எழுதுவதற்குப் பல முக்கிய விஷயங்களை அன்புகூர்ந்து உதவிய ஸ்ரீலஸ்ரீ. கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் B. A: அவர்களுக்கு மிக நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மா. அ. கனகசபை முதலியார்.

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க *

# அறிவிப்பு.

நமது சமூகம் முன்னேற்றமடைய முக்கியமாக உள்ள கல்வியை வளர்ப்பான் பொருட்டு ஏழைச்செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டியதற்காக நமது குலந்தவரைப் பொருளுதவி புரியுமாறு கேட்டுக்கொண்டதி னிமித்தம் அனேகர் நமது சங்கத்திற்குப் பொருளுதவி புரிந்தனர். பலர் நமது சங்கத்திற்குச் சம்பந்தமில்லாத சிலரிடம் பொருள் கொடுத்துப் பின் நமது சங்கத்திற்குக் கடிதமூலம் தெரிவிக்கின்றனர். அவைகள் நமது சங்கத்திற்கு வந்து சேரவில்லை என்று வினயமாய்த் தெரிவித்துக் கொள்ளுவதுடன், இனி நமது செங்குந்தகுல முன்னேற்றமடைய வேண்டியதற்காகப் பொருளுதவி புரியும் கனவான்கள் நமது சங்க அமைச்சருக்கு நேரே அனுப்ப வேண்டும் அல்லது சங்க அமைச்சர் கையெழுத்திட்ட அச்சுப்பாரசீது பெற்றுக்கொண்டு பொருளுதவிபுரிய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தி. நா. சபாபதி முதலியார்.
ம. சண்முகசுந்தர முதலியார். எம்.ஏ., எல்.டி.,
ஷை சங்க அமைச்சர்கள்.

---

* விலாசம்: 31 அரண்மனைக்காரன் தெருவு, சென்னை.

## பொதுப் பகுதி.

### இன் சொல்.

*இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்*
*வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்*
*அதிர்வளையாய் பொங்காதழற் கதிரான் றண்ணென்*
*கதிர்வரவாற் பொங்குங் கடல்.*

இன்சொல் என்பது இனிமை - சொல் என்னும் இருசொற்களா லமைந்த ஒரு தொடர். இனிமை - இனிமையாகிய, சொல் - வார்த்தை எனப் பொருள்படும். அதாவது மனத்தின்கண் உள்ள சந்தோஷத்தை வெளியாக்கும் சொல், பிறருக்குச் சந்தோஷத்தை உண்டாக்கும் சொல் எனவும் கொள்ளலாம். இன்சொல்லுக்கு எதிராக நிற்பது வன்சொல். வன்சொலுடையோன் மிருகத்தினும் கடையாவான் என நமது பெரியோர்கள் மொழிந்துள்ளார்கள். வன்சொலுடையோன் பலவித இன்னலுறுவான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நாம் கர்த்தபத்தைப் பழிப்பதேன்? அது கடுமையாகக் கத்துதலாலல்லவா. குயிலைப் புகழ்வதேன்? அது இனிமையாகப் பாடுதலாலல்லவா? ஆகையால் இவ்வையகம் வேண்டி நிற்பது இன்சொலன்றோ?

இனி, இவ்வின் சொல்லை எப்படி அடையப் பெறுவதெனில், இது இளமையிலிருந்தே தொடங்கல் நலம். தாய் தந்தையர்கள் குழந்தைகளிடத்துக் கடுஞ்சொல் மொழிவதை விட்டொழிக்க வேண்டும். அன்புகொண்ட வசனங்களையே அவர்களிடத்து மொழிதல் வேண்டும். தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டாதலால், இளைஞர்கள் இன்சொல்லை அவசியம் கைக்கோடல் வேண்டும்.

நம்முடைய கடுஞ்சொற்களால் பிறர் துன்புறலும், இன்சொற்களால் அன்னவரே இன்புறலும் ஆகிய இருவகைத் தன்மைப் பெறப்படுதல் பற்றி, அஃது எவ்வளவு பெருமையை யுடைத்தாயிருக்கின்றதென உணரலாம். நாம் அன்பு, சாந்தம், பொறை, இரக்கம் முதலியவைகளோடு கூடிய இன்சொற்களை மொழிய வேண்டுவது முறையாயிருக்க, அதைவிட்டுப் பிறருக்குத் துன்பந் தருவதும் கோபமூட்டலுமாகிய வன்சொல்லை மொழிவது தருமநீதியாகுமா? நாம் முகமலர்ச்சியோடு இன்சொல் பேசின் அதுவே பெருத்த தருமமாகும். அறமெனப்படுவது யாது? எவ்வுயிர்களிடத்தும் அன்பாயிருத்த லன்றோ? இன்மொழியுள்ளவர்களிடத்துத் தரித்திரமேது? அதுவே அவர்களுக்கு ஒரு ஆபரணத்தை ஒக்குமல்லவா? இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் ஆனந்த ரூபமாகவே இருக்கின்றன. அப்படியிருக்க ஒருவன் வன்மொழி மொழிந்து மகிழ்வதும் மற்றொருவன் துன்புறுவதும் அழகாமோ? இன்சொல் மொழிவோனுக்கு மூர்க்கனும் வசமாவான். கடுஞ்சொல்லுடையானைச் சாந்தகுணமுள்ள பெரியோரும் கோபிப்பர். நாம் அறம் பயக்கும் இன்சொற்களைப் பெற்றிருக்க, அவற்றைவிட்டுப் பாவத்தை உண்டாக்கக்கூடிய வன்சொற்களை மொழிவது, மனதுக்கினிய கனிகளிருக்க அவற்றைவிட்டு இன்பத்தை உண்டாக்காத காய்களை விரும்புவதையே ஒக்கும்.

இன்சொல்லுடையானுக்கு அற்ப அறிவைப் பெற்ற ஜீவராசிகளும் வசமாய்விடும். இனிய மொழியாகிய புல்லாங்குழலினது ஓசையைக் கேட்டவிடத்தே துஷ்டத்தனமுள்ள பாம்புகள் அப்படியே மயங்கிவிடவில்லையா? குயில்கள் அப்படியே குழம்பிவிடவில்லையா? இப்படியே சகல ஜீவராசிகளும் மயங்கிவிடுகின்றன. எப்பேர்ப்பட்ட கடுமொழிகள் கொண்ட மனத்தையும் ஊடுருவிச் சென்று நம் வயப்படுத்தவல்லது இன்சொலன்றோ?

சிலர் தங்கள் வீட்டிற்கு ஏதோ ஒரு பிச்சைக்காரன் வந்துவிட்டால், அவனைப் பல கடுஞ்சொற்களால் விரட்டியோட்டுகின்றனர். அப்பொழுது அவனது மனம் எவ்வளவு துன்புறும் என்பதை நோக்குகிறார்களா? வன்மொழிகளை விட்டு அவனை இன்மொழிகளால் விசாரித்து, தங்கள் வீட்டில் ஏதாவது இருந்தால் இட்டு, இல்லாவிட்டால் இன்மொழிகளால் "அப்பா இன்று எங்கள் வீட்டில் ஒன்றும் இலது, அக்கம்பக்கம் போய்ப் பார்" என்று மொழிந்தால் அவனுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாகுமென்பதை நோக்குவார்களாக. சிலர் பெரும்பதவிகளை அடைந்துவிட்ட மட்டிலே தங்களுடைய உதவியை நாடிவரும் இதர மனிதர்களை நோக்காமலே சில கடுஞ்சொற்களால் விரட்டியோட்டுகிறார்கள். சிலர் தங்கள் வீட்டிலுள்ள வேலைக்காரர்களிடம் கடுஞ்சொல் பிரயோகிப்பதே நலம் என்று கருதுகிறார்கள். இவற்றை விட்டு

இன்மொழிகளால் அவர்களை நடத்தினால் அவர்கள் எவ்வளவு அன்போடு அவர்களது பணியைச் சிரமேற்கொள்வார்களென்பதை அவர்கள் சிந்தித்திலர் போலும். நமக்குத் தாழ்ந்தவர்களைக் கடுமையாக நடத்தினால் நாம் கடவுளுக்குத் தீமை செய்தவர்களாகிறோ மல்லவா? எல்லா ஜீவராசிகளும் கடவுளது அன்பிற்குகந்த மக்களன்றோ? கடவுள் அன்புருவன்றோ? அவரை அடைய வேண்டின் நாம் அன்புடையவர்களாய் இருக்கவேண்டு மல்லவா?

இது ஒருபுறமிருக்க, நாமெல்லோரும் தமிழ் மக்களல்லவா? தமிழ் என்பது இனிமை எனப் பொருள் தருவது பற்றி, இனிமையிலேயே பிறந்து, இனிமையாகிய தமிழ்ப் பாலினால் வளர்ந்து கடுஞ்சொல் வழங்குவது நம் தமிழ் மக்களுக்கு அடுக்குமா என்பதை யோசிப்போமாக. ஒரே பிடிவாதமாக எல்லா சர்ப்பங்களையும் அடியோடு அழித்தொழிப்பேனென்று சர்ப்பயாகம் செய்த ஜனமேஜய மகாராஜனது கடூர மனத்தைக் கவர்ந்தது இனிய சொல்லல்லவா? ஆகையால் நாமெல்லோரும்,

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.

என்னும் திருமூலநாயனார் அருமைத்திருவாக்கை மனத்தில் உன்னி, நாம் எவ்வித துன்பத்தை அடைந்தாலும் இன்சொல்லே பேசவேண்டுமெனச் சபதம் செய்துகொண்டு அதன்படி ஒழுகி, இம்மை இன்பத்தை நுகர்ந்து, மறுமை இன்பத்தையும் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வை அடைவோமாக.

S. சண்முக முதலியார்.

---

## அருள்.

உலகிலுள்ள எப்பொருள்களும் தத்தமக்குள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருப்பதைக் காண்கிறோம். தொடர்பிலாதன ஒன்றுமில்லையெனலாம். முற்றத் துறந்த முனிவருந் தாம் வழிபடுங் கடவுளிடத்துத் தொடர்புடையவரே அன்றோ? இஃதிங்ஙனமாகவின், உலகு நிலைபேறுடையதாக இருப்பது ஒன்றற்கொன்றுள்ள தொடர்பே எனலாம்; தொடர்பின்றேல் உலகு நிலைபேறு உடையதாகாது. இத்தொடர்பையே "அன்பு" என்கிறோம்.

இவ்வித அன்பு சாதாரணமாக உயிர்த்தொகைகளிடத்துச் சிறுசிறு பங்காகத் தனித்தனி பிரிந்து காணப்படுகிறது. இவ்வன்புடைமையாலேயே சில உயிர்த்தொகைகள் மற்றையவற்றிடம் அன்புடைமையுங் காட்டுகின்றன. உடம்பெடுத்த ஒவ்வோருயிரும் முதன்முதலில் தம்மை உடம்பினின்றும் நீங்காமல் தாமே காக்கக்கூடிய வன்மையுடையன போல் நினைத்துக் காக்க எண்ணுகின்றன. பின்னர்த் தம்மால் விரும்பப்பட்ட உயிர்களிடம் அன்பு காட்டி அவைகளைக் காக்க முற்படுகின்றன. தம்மையுந் தம்மைச் சார்ந்தவற்றையுங் காக்கவே பிறவுயிர்களைப் பகைக்கின்றன; பிறவுயிர்களிடம் அன்பு காட்டுவதும் இதனாலேயேயன்றோ? சற்றுக் கவனிப்போமானால், இவ் வன்பை அன்பென்று கூறமுடியுமா? தந்நலங் கருதிய தகைமையென்றன்றோ கூறவேண்டியிருக்கிறது?

தந்நலங் கருதுந் தன்மையாலும் பரவிய இடத்தாலும் குறுகியிருக்கும் இவ் வன்பு, வளர்ச்சியுற்று, எல்லையின்றி யெங்கும் பரவ, தமது என்னும் சிறிய பற்றற்று, "எவ்வுயிரும் நம்முயிர் போன்றனவே" என்னும் உண்மையறிவு உதிக்குமேல், அதனையே கற்றோர் அன்பு என்பர்; அருள் என்று கூறுவதும் இதனையேயாம். நம் பொய்யா மொழியாகிய வள்ளுவர் "அருள் என்னும் அன்பு ஈன் குழவி" என்கிறாராகையினால், அவருக்கும் இதனிற் கருத்து வேறுபாடின்மை யறிக.

அன்பர்களே, உற்றுக் கவனியுங்கள். அருளினால் நமக்கு எவை உண்டாகாதன? ஆருயிர்களின் மாட்டு அருளுடையானொருவன் தான் எண்ணிய தேயத்து எய்தப் பெறாதன எவை? தந்நலங் கருதாத் தகைமையாளனெவ்வொருவனும் தானிருக்குமிடம் எல்லையில்லாததாகி யெல்லையில்லா இன்பம் அடைந்து வாழ்வான் என்பதை யாவரும் உணர்வர். நம் இந்தியாவே அன்றி மற்றைய தேசங்களினும் புகழ் பரப்பிய பேரறிவாளராங் காந்தியடிகளை உணராதார் உண்டோ? அவருக்குப் புகழ் எய்தியது எதனால்? இணையில்லா அருளினாலன்றோ?

இந்நிலத்தில் மக்கட்பிறவியை ஆறறிவுயிராகக் கொள்வர் கற்றோர். மற்றைய பிறவிகளெல்லாம் மக்கட் பிறவியைவிடத் தாழ்ந்தனவாகக் கருதவேண்டிய காரணமென்ன? அவற்றிற் குள்ள அறிவு மக்களுக்குள்ள அறிவைவிடக் குறைந்ததாகக் காண்கிறதினாலன்றோ?

இங்ஙனம் மக்கட்பிறவி மற்றைய பிறவிகளைவிட மேம்பட்டுக் காண்கிறதினால், மக்களாகவுள்ளோர் தமக்குள்ள ஆறறிவையுந் தமதென அறிந்து, கைக்கொண்டு ஆண்டு மேன்மையுற்றாலன்றோ மக்களெனக் கருதப்படுவார். இன்றேல், ஐயறிவுடைய விலங்கு, புள் முதலியவற்றோடும் சேர்க்க இயலா நிலைமையடைவராவர். எங்ஙனமெனில், ஐயறிவுடைய உயிர்கள் தத்தமக்கு விதிக்கப்பட்ட அறிவினின்றும் மாறாமலிருக்கின்றன. ஆகையால் அவற்றை ஐயறி வுயிராகவே கருதுகின்றோம். மக்களுயிர் ஆறறி வுயிராகையால் ஆறறிவினின்றுங் குறையாதிருத்தல் வேண்டும். அப்படிக் குறையாதபொழுது மக்களாகக் கருதலாம். குறைந்தால், தம்மியற்கையினின்றுந் தவறிய வேறொரு பொருளுண்டேல் அதனோடு சேர்க்கலாமே யன்றித் தந்நிலைதிரியா உயிர்த் தொகைகளோடு சேர்த்தற்கியலாது.

இதுகாறும் மக்களுயிர் எல்லைபற்ற இன்பம் பயப்பதென்றும் மக்களுயிர் எவ்வுயிரினுஞ் சிறந்ததாயினும் தந்நிலைதிரிந்தால் மிகத் தாழ்ந்ததாக அறிவுடையோர்களாற் கருதப்படுமென்றும் கூறப்பட்டது.

இனி, மேற்கூறிய அருளுடைமையைத் தமக்கு உடைமையாகக் கொண்டு ஒழுகத்தக்கன நம்மக்கட் பிறவியேயாம்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐயறிவோடும் நன்று தீதென உணரும் மெய்யறிவையும் உடையது நம் மக்கட் பிறவியேயன்றோ?

"அருளாவது பிறவுயிர்களுக்குற்ற ஊறு கண்டவிடத்து உண்டாகும் கழியிரக்கம்" என்பர் கற்றோர். இவ் விரக்கமுடையவனே மக்களிற்றலைமை யுடையனவாகக் கருதப்படுகிறான். ஒருவன் தான் மேன்மையுடையவனாக வேண்டுமானால், எவ்வுயிருந் தன்னை விரும்ப வேண்டுமென்ற எண்ணமுடையவனானால், அவன்



பிறவுயிர்மாட்டு அருளுடையனாக வேண்டும். பிறவுயிர்கட்கு உற்ற ஊறு கண்டவிடத்து விரைந்துசென்று நீக்கல்வேண்டும்; அவைகளிடந் துன்பங் கண்டபோது இயற்கையாகவே தன் கண்ணினின்றும் நீர் பொழியவேண்டும். ஈதன்றோ உடம்பெடுத்ததன் பயன்?

(தொடரும்)

ஜ. இராஜு முதலியார்.
தமிழாசிரியர்.

---

## மாமிச பக்ஷண விலக்கு.

சைவ வைஷ்ணவமத சித்தாந்தப்படி மாமிசம் புசிப்பது தோஷமாயும் கிறிஸ்துமத சித்தாந்தப்படி நிர்தோஷமாயு மிருக்கின்றது.

மறுபிறப்பில் மோக்ஷத்தையடைய விரும்பினவன் மாமிசம் புசியாதிருத்தல் வேண்டும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

என்ற திருவள்ளுவநாயனார் திருவாக்கின்படி இப்பூவுலகில் மாமிசத்தைப் புசியாதவனை எல்லா ஆன்மாக்களுங் கடவுளென்று வணங்குவன. மனுஷனாகப் பிறந்து மோக்ஷத்தையடைய விரும்புகின்றவன் எல்லா ஆன்மாக்களிடத்தும் மிக்க இரக்கமுள்ளவனாயிருத்தல் வேண்டும். ஒருவனுடைய புத்திரனை வேறொருவன் தண்டிப்பானாகி லவன்பிதா பொறுத்திருப்பானா? அது போலக் கடவுளினுடைய பிள்ளைகளாகிய ஜீவப்பிராணிகளை வதைசெய்யும்போது அவர் மனமென்ன பாடுபடும்?

"அம்மா வெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மானிடரெல்லாம் இன்புற்றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்குப்
பொய்மா னிரயமென்றால் புசித்தவற்கென் சொல்லுவதே"

பூமியிற் சிருஷ்டிக்கப்பட்ட பஞ்சமா பாதகங்களு மிம்மாமிசத்தினாலேயே நடைபெறுகின்றன. இப்பூவுலகிலொருவன் மாமிசத்தை விடுவானாகிலதற்குத் தோழனான மதுவுந் தொலைந்துவிடும். அப்

பால் மதுத்தொலையுமானா லதோடொத்த பஞ்சமா பாதகங்களுந் தொலைந்துவிடும். இப்பூவுலகிலுள்ள ஜீவபிராணிகளெல்லா மிக் கர்மப்புலையரையே இகழுகின்றன என்பதைப் பின்வருஞ் செய்யுட் களா லுணர்க.

“புலையர்தம் மலமுண்ணும் எனையுண்ணும் புலையற்கு
குலமென்ன நலமென்ன கூ கூ என்றன கோழி.”

“பறையரைப் பறைய ரென்று பறைந்திடு மனிதர் கேளீர்
பறையர்தம் மலத்தைத் தின்ற பன்றியைப் புசிப்ப தென்றோ
கறையதே யாருமந்தக் கறிதனைக் கலத்தினிட்டு
மறையவே வைத்துத் தின்னு மனிதரே பறையர் கண்டீர்.”

இவ்விதம் பல செய்யுட்களாற் புலைத்தொழில் மிக்க துன்பத்தை யடைவதற்கு வழியாயிருக்கிறது. மேலும் புலால் புசிப்பவனொரு பொழுதும் மோக்ஷ சாம்ராஜியத்தை அடைய மாட்டானென் பதைப் பின்வருஞ் செய்யுட்களா லுணர்க:

“கூறுபோட்டவன் கொன்றவன் தின்றவன் கூடநின்றவன்
சொன்னவன் கேட்டவன்
ஆறுபேர்க்கு மருநரகேகதி ஆழிபோல்கிணா
றுழுமுண்டாக்கியே
சிறுபாம்பு செயான் மரவெட்டைகள்
தேளுநட்டுவக்காலி செம்பாம்புகள்
விறுபூச்சிகள் வேணதெல்லாம்விழ
வீழ்த்துவர் வேலர்தம் மாணையே.”

மேலும் “ஆடு, பன்றி, கோழி அருந்துவோர்கட் கெல்லாம் வீடில்லை” என்றுரைக்கும் வேதங்கள்.

“கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல் போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலுஞ்
சங்கையில்லாத ஞானதத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போர் போய் நரகடைவர் தாமே.”

(தொடரும்.)

V. K. சின்னதம்பி முதலியார்.



# அறிவுடைமை

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவில்லார்
என்னுடைய ரேனும் இலர்.

அதாவது ஒருவர் அறிவுடையரா யிருந்தால் எல்லா நன்மைகளை யும் உடையவராவார். அவ்வறிவில்லாதவர் எவ்வளவு செல்வமுடை யவராயினும் ஒருபயனும் இல்லாதவரே யாவர் என்பது ஆசிரியர் திருவள்ளுவனாரது தெய்வ மொழியானதால் ஒவ்வொருவரும் அறிவுடையரா யிருத்தல்வேண்டும் என்பது நன்கு புலனாகும். அவ்வறிவானது கல்வி கற்றதினாலேயே உண்டாகின்றது. கல்வி யின்பயன் அறிவும், அறிவின் பயன் ஒழுக்கமுமேயாம் ஒருவருக்குக் கல்வியின்றேல் அறிவில்லை அறிவின்றேல் ஒழுக்கமில்லை. அதனாற் றான் கல்வியினால் உண்டாகின்ற விதிவிலக்குகளை அறியாவிடின், நன்மையின்னது, தீமையின்னது, பாவம் இன்னது, புண்ணியம் இன்னது, இன்பம் இன்னது, துன்பம் இன்னது, தருமம் இன்னது, அதருமம் இன்னது, பொய்மையின்னது, மெய்மையின்னது என்ற இவைபோன்ற உண்மைகளைத் தெரிந்து கொள்வது இயலாது. அதனாற்றான்,

“உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லாதவர்.” என்றார்

நமது ஆசிரியர் வள்ளுவனாரும். அதாவது செல்வர்கள் முன் ஏழைகள் எவ்வாறு பொருள் வேண்டுமென்று இரந்து பெற்றுக் கொள்கின்றார்களோ, அதேபோல், கல்வியாளர்கள் முன்போய் அக் கல்விப்பொருளை இரந்தாயினும் கற்றுக்கொள்ள வேண்டும். அன் னிலைக்கு அஞ்சிக் கற்றுக்கொள்ளாவிடின் அவர் கடைப்பட்டவரே யாவர். இரந்தாவது கற்றவர் பெரியவரே யாகின்றார். தற்காலத்தில் ஒரு சிலர் பணம் சேர்த்தலே மிகச் சிறப்புடையதென்று கண் ணும் கருத்துமாய்ப் பணத்தைச் சேர்ப்பதல்லது, கல்வியில் சிறிதும் அன்பு காட்டாது அடியோடு மறந்துவிடுகின்றனர். கல்வி அறிவில் லாதவர்கள் எவ்வளவு பணத்தைச் சேர்ப்பினும் பயனற்ற முயற் சியே யாகுமல்லது ஒரு பயனையுமடையார்.

‘நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு’

என்பது, திருவள்ளுவனாரது திருமொழியாம். அதாவது கற்ற பேரறிவாளர்களை வறுமை ஒரு துன்பமும் செய்யாது. கற்றுக்

கொள்ளாத அறிவற்றவர்களை அவர் படைத்த செல்வம் மிகவும் துன்பப்படுத்திவிடும். ஆதலால், உலகத்திலே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மனிதப்பயனை அடைய வேண்டுமாயின் நாம் உணவின் பொருட்டுப் பொருள் தேடுவதில் எவ்வளவு ஆத்திரம் காட்டுகின்றோமோ அவ்வளவு ஆத்திரத்துடன் கல்வியிடத்தும் சிறிது முயலவேண்டும். கல்விகற்ற மக்களைத்தான் நன்மக்களென்று அழைக்கின்றார்கள்; கல்வியாளர்களே மனிதப் பயனையடைகின்றார்கள். மற்றவர் மனிதப்பயனோடு வேறுள்ள பயன்களும் ஒருங்கே மாளக்கிடக்கின்றனர். அக்கல்வியும் இருவகைப்படும்: ஒன்று ஆன்ம லாபத்திற்குரிய மெய்ப்பொருள் கல்வி, மற்றொன்று, சேவகக் கல்வி.

நிற்க, தற்காலத்தில் மிக இழிவாகிய சேவகக் கல்வியையே ஒரு சிலர் மிகவும் பாராட்டுகின்றனர். சேவகக் கல்வியினால் எவ்வளவு மேம்பாடுடைய ராயினும் பிறனுக்கு அடிமைத்தொழில் செய்வதற்கே உரியவ ராகின்றனர். கல்வியின் பயன் அடிமையினின்று விலங்குவதேயாம்; சுதந்தர உணர்ச்சியை உண்டு பண்ணுவதேயாம். அதனாற்றான் தற்கால நாகரீக அறிவாளிகள் சேவகக்கல்வியை அறவே ஒழிக்கின்றனர். அது வேரூன்றி விட்டது. நமது தாய் மொழியாகிய தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதே கல்வி எனப்படும். ஆதலால் நந் தாய் மொழியைச்செங்குந்த சகோதர சகோதரிகளே! நம் இரு பாலர்களுக்கும் அவசியம் கற்பித்தல் வேண்டும். அவ்விதம் கற்பித்தோமானால் நம்மரபார் முன்னேற்ற மடையலாம் என்பது உண்மையே.

நம்மரபார் சிலர் இச்செங்குந்தமித்திரனுக்குச்சந்தாதாரராகவும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு மெம்பர்களாகவும் இருந்து ஆதரித்து வருகின்றனர். அதுபோல் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள செங்குந்த குலமக்கள் மித்திரனைப் போற்றிப் பாராட்டாததால் மிக்க மனம் வருந்துகின்றது. ஆனது பற்றியே நம் செங்குந்தமித்திரன் மாத முறையாய் வெளிவருவதை வாரமுறையாய் வெளிவந்துலாவும் படிக்குச் செங்குந்தர்கள் சந்தாதாரராய்ச் சேர்ந்து உதவிபுரிவோமானால், நம் குலமித்திரன் முன்னேற்ற மடைவான் நம்மரபினர் கல்வி அறிவு ஒழுக்கங்களால் மேம்படுமாறு இறைவன் இன்னருள் புரிவானாக.

K. A. குற்றாலலிங்க முதலியார்.

---



# செங்குந்த குலமக்களின் கிளர்ச்சி.

## மாப்பிள்ளைகுப்பம் செங்குந்த முதலியார் மகாஜன சங்கத்தின் விசேஷக் கூட்டம்.

ஷை சங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார் :—

9-7-27ல, மாலை 5-மணிக்கு மாப்பிள்ளைக்குப்பம் ஸ்ரீ சந்தைவெளி மாரியம்மன் கோயில் சந்நிதியில் உயர் திருவாளர் K. L. இராமலிங்க முதலியாரவர்கள் தலைமையின் கீழ் ஷை சமூகக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் சுற்றுக் கிராமங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும், பிரபல வியாபாரிகளும், மிராசுதார்களும், மற்றும் ஏனையோர்களுமாகச் சுமார் 200 பேர்கள் வரையிலும், வந்திருந்தது போற்றத்தக்கது. அச்சமயம் சிக்கல் பொருள் வைத்தசேரி செங்குந்த முதலியார் மகாஜன சபை காரியதரிசி உயர் திருவாளர் C. S. கந்தசாமி முதலியாரவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்தில் திருமருகல்போர்டு ஸ்கூல் ஹெட் மாஸ்டர் உயர் திருவாளர் S. சுப்பிரமணிய முதலியாரவர்கள் கடவுள் வாழ்த்தும் தேசிய கீதமும்பாடி முடித்தபின், திருவாளர் C. S. கந்தசாமி முதலியாரவர்களைச் சபையோர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துச் சபையின் சார்பாக உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு:—

கனவான்களே! பிரபுக்களே! சமூகத்தவர்களே! இன்று என்னைக் கௌரவமாக எண்ணி எனக்களித்த உபசாரப் பத்திரத்திற்கு நான் எவ்விதத்திலும் அருகனல்லேன். ஆனால், என்னிடத்துள்ள வாஞ்சையினால் எனக்கு அளித்த உபசாரப் பத்திரத்தைப் பெற்று இனியும் சமூகசேவை செய்வதற்கு உற்சாகத்தை யுண்டு பண்ணும் பொருட்டு இவ்வுபசாரப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். முற்காலத்தில் நம் சமூகமானது எவ்வகையிலும் முன்னேற்ற மடைந்திருந்த தாகவே பலநூலாராய்ச்சிக்காரர்களாலும், சமூக சாஸ்திரங்களாலும் காணக் கிடக்கின்றது. ஆதியில் எவ்வளவு உன்னத பதவியில் நாமிருந்தோமோ அவ்வளவுக்கும் தற்காலம் சீர்கேடான ஸ்திதிக்கு வருவதற்குக் காரணம் யாதென்பதை யோஜிக்குங்கால், நாம் கல்வியில் பின்னடைந்திருப்பதும், நாம் கைக்கொண்ட நெய்தற்றொழிலே. அரசாங்கத்தார் பாதுகாத்து அபிவிருத்தி செய்யாததுமே, நம்முடைய வறுமைக்குக் காரணங்களாகும். மேற்படி அரசாங்கத்தார் நமது

சமூக வறுமையைப் போக்குவதற்கு எவ்வித முயற்சியையும் எடுத்துக்கொள்ளாததற்குக் காரணம் நமது அறியாமையேயாகும். தற்காலத்தில் காங்கிரஸ் கட்சியென்றும், ஜஸ்டிஸ்கட்சியென்றும், சுயேச்சைக்கட்சியென்றும் இம்மூன்று பிரிவுகளா யிருந்தபோதும், சுமார் பத்துவருஷங்களுக்கு முன்னால் காங்கிரஸ் கட்சி தனியாக யிருந்து நமது சமூகத்தவர்கள் மேற்படி கட்சிகளில் கலந்திருந்தும், உத்தியோகம் வகித்திருந்தும் நாளது வரையிலும் சமூகஊழியம் என்பதை மறந்து, தன்னலம் கருதியவர்களாகவே யிருந்து வந்திருக்கின்றனர். ஆகையால், கனவான்களே! நாம் இனியும் அவர்களை நம்பி ஏமாறிப் போகாவண்ணம் ஒவ்வொரு கிராமந்தோறும் சமூகசங்கங்களை ஏற்படுத்தி ஷை சங்கங்களின் மூலமாகவே நமது குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும். அப்படி நிவர்த்தி செய்துகொள்வதற்கு நமது சமூகத்தின் பிரபல வியாபாரிகளும் மிராசுதார்களும் நமது சங்கத்தின் தலைவர்களுமே காரண பூதர்களாகவே யிருத்தல் வேண்டுமென்றும், நமது சமூகத்தவர்கள் கதராடையை ஆதரித்தல் வேண்டுமென்றும், கல்வியறிவு, ராஜ்ஜிய ஞானம் முதலிய விஷயங்களில் பயிலுவது சமூகக் கடமையென்றும், இன்னும் மற்றும் பல விஷயங்களையும், உபமான உபமேயங்களாலும், எடுத்துக் காட்டிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பின்னர், திருமருகல் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் திருவாளர் S. சுப்பிரமணிய முதலியாரவர்கள் "சமூக ஒற்றுமையும் நமது கடமையும்" என்பதைப்பற்றி விரிவாக உபந்நியாசித்தார்கள். பின்னர் சபையின் உபதலைவர் உயர்திருவாளர் M. A. கோவிந்தசாமி முதலியாரவர்கள் சங்கத்தைப் பலப்படுத்தி நாம் ஒற்றுமைத்து முன்னேற்றமடைவதற்கு ஏதுக்களையும் எடுத்துச் சொல்லி, இப்படிப்பட்ட சமூக ஊழியர்கள் அடிக்கடி வந்து உபந்நியாசம் செய்யவேண்டிய தவசியமென்றும் சங்கத்தில் நடக்க வேண்டிய முறைகளைப்பற்றியும் அதிக விரிவாகப் பேசி முடித்தார்கள். பிறகு ஷை எட்மாஸ்டர் S. சுப்பிரமணிய முதலியாரவர்கள் திருநாகேஸ்வரத்தில் உயர் திருவாளர் பொன்னம்பல முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் இரண்டாவது மகாநாடு கூட்டுவதாகத் தீர்மானித்திருக்கிறபடி விரைவில் ஷை மகாநாடு நடத்த வேண்டுமென இச்சங்கத்தாரால் கேட்டுக்கொள்ள வேண்டுமெனப் பிரரேபணை செய்யத் தலைவர்களாலும் சபையோர்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டது. பிறகு சங்கத்தின் காரியதரிசி திருவாளர் S. சுந்தர முதலியாரவர்களால் சபைத்தலைவர் திருவாளர் K. L. இராமலிங்க முதலியாரவர்களுக்கும், உபத்தலைவர் திருவாளர் M. A. கோவிந்தசாமி முதலியாரவர்களுக்கும், திருவாளர் C. S. கந்தசாமி முதலியாரவர்களுக்கும், திருவாளர் S. சுப்பிரமணிய முதலியாரவர்களுக்கும் புட்பஹாரம் சூட்டப்பெற்று சந்தனபுஷ்ப தாம்பூல முதலியன சபையோர்களுக்கு வழங்கப்பெற்றுக் கூட்டம் இரவு 11-மணிக்கு இனிது நிறைவேறியது.



---

## சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கம்.

1927 ஃடு ஜுலை மீ 31உ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சைதாப்பேட்டையிலுள்ள பெரியபேட்டை ஸ்ரீ நடராஜ சபையில் செங்குந்தர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அச்சமயம் சென்னையிலிருந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர்கள் திருவாளர்கள் T. N. சபாபதி முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், அவர்கள் M. A., L. T., M. இராமலிங்க முதலியார் தி. அ சண்முகமுதலியார், மு. அருணாசல முதலியார், மா. அ. கனகசபை முதலியார், திருக்கழுக்குன்றம் ச. சாமிநாத தேசிகர், ஆனைக்காப்புத்தூர் அ. விஜயரங்க முதலியார் முதலியவர்களும் விஜயஞ் செய்திருந்தனர். அக்கூட்டத்திற்குத் திருவாளர் T. N. சபாபதி முதலியார் அவர்கள் அவைத் தலைமை வகித்துச் செங்குந்தராகிய நாம் பண்டைய ஒழுக்கங்களை யெல்லாம் கைநழுவவிட்டும் கல்வியில் பின்னடைந்தும் இருப்பதால் நாம் முன்னேற்றமடைய முடியாமல் தாழ்ந்த நிலையில் இருக்கிறோமென்றும் நாம் மற்ற இனத்தாரைப்போல் முன்னேற்றமடைய வேண்டுமானால், நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு பட்டினங்களிலும் கிராமங்களிலும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கங்கள் நிறுவி அவற்றின் மூலமாகத் தான் முயன்று உழைக்கவேண்டுமென்றும், ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் முதலியன கொடுத்து உயர்தரக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் படிக்கச் செய்யவேண்டுமென்றும், சைதாப்பேட்டையில் ஒரு கிளைச்சங்கம் இருக்கவேண்டியது மிக அவசியமானதென்றும், சுமார் 15 நிமிஷம் சுருக்கமாகவும், விளக்கமாகவும், கேட்டோர் மனத்தைக் கவரும்படியாகவும், தமது இயற்கையான இன் சொற்களால் மூன்று வகையாகப் பேசினார். பிறகு சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்று அச்சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் கீழ்க் கண்டபடி தெரிந்தெடுக்கப்பட்டனர் :—

**தலைவர்**

திருவாளர் S. சடையப்ப முதலியார் அவர்கள்,

முனிசிபல் கவுன்சிலர்,

## துணைத்தலைவர்.

திருவாளர். S. இரத்தினவேல் முதலியார் அவர்கள்,
முனிசிபல் கவுன்சிலர்.

,, K. சண்முகசுந்தர முதலியார் அவர்கள்,
செங்குந்தர் கோவாபரேடிவ் சொசைடி, சைதாப்பேட்டை.

## பொக்கிஷதார்.

,, T. துரைசாமி முதலியார் அவர்கள்
Insurance Agent, Messers Shaw Wallace & Co, Madras.

## அமைச்சர்.

,, S. முருகேச முதலியார் அவர்கள், B.A., L.T.
Snpdt. Office of the Director of Public Instruction, Madras.

S. T. நடேச முதலியார் அவர்கள்
Agent's Office, M. & S. M. Railway, Madras.

## அத்தியக்ஷகர்கள்.

,, ச. நடராஜ முதலியார் அவர்கள்
வே. நடேச முதலியார் அவர்கள்
Partners, The Saidapet Big Palayakhat Co.

,, தி. க. இரத்தின முதலியார் அவர்கள்
Partner, The Saidapet Best Palayakhat Co.

,, செ. ஆறுமுக முதலியார் அவர்கள்
சா. ப. கோவிந்தசாமி முதலியார் அவர்கள்
Partners, The Saidapet Superior Palayakhat Co.

,, தி. ம. குப்புசாமி முதலியார் அவர்கள்
Partner, The Saidapet Real Palayakhat Co.

,, கூ. அ. வேலாயுத முதலியார் அவர்கள்
கூ. வைரவேல் முதலியார் அவர்கள்
Partners, Messrs Baboo & Co.

,, ம. இராமலிங்க முதலியார் அவர்கள்
Partner, Messrs Noor Mahomad & Co.

,, தொ. துரைசாமி முதலியார் அவர்கள்
Municipal Councillor.



திருவாளர். ம. குமாரசாமி முதலியார் அவர்கள்
Timber Merchant.

,, P. C. ராஜு முதலியார் அவர்கள்
Office of the Director of Industries Madras.

S. P. சண்முக முதலியார் அவர்கள்
Stock Verifier' Accountant General Office, Madras.

,, S. P. ராஜு முதலியார் அவர்கள்
Stock Keeper, Messrs Brooke Bond Ld, Madras.

,, க. ராஜு முதலியார் அவர்கள்
Trustee, Sri Subramanya Swami Devasthanam.

,, கொ. செ. முனிசாமி முதலியார் அவர்கள்
தேவஸ்தான தர்மகர்த்தர், பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்,

,, மு. குமாரசாமி முதலியார் அவர்கள்
,, ம. சண்முக முதலியார் அவர்கள்
,, ஆ. முனிசாமி முதலியார் அவர்கள்
,, ரூ. கந்தசாமி முதலியார் அவர்கள்
,, தி. மு சுப்பிரமணிய முதலியார் அவர்கள்
,, கொ. நடேசமுதலியார் அவர்கள்
,, ப. தங்கவேல் முதலியார் அவர்கள்
ஜவுளி வியாபாரிகள், சைதாப்பேட்டை.

## தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கப் பிரதிநிதிகளின் சுற்றுப் பிரயாணம்.

### உத்திரன் மேரூர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசியும், 'செங்குந்தமித்திரன்' பத்திரிகாசிரியருமான திரு. ம. சண்முக சுந்தரமுதலியார், M.A.L.T., அவர்கள் சங்க நிர்வாக சபை அங்கத்தினர்களாகிய திரு.மா.பா. கந்தசாமி முதலியார், B.A. B.E., திரு. மா. அ. கனகசபைமுதலியார் அவர்கள் ஆகிய மூவரும் பிரசாரஞ்செய்யும் பொருட்டுச் சென்ற ஆகஸ்டுமீ 20ௗ சனிக்கிழமை காலை 9½ மணிக்கு உத்திரன் மேரூரையடைந்து, போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திரு. கா. உ. பொன்னுசாமி முதலியார் இல்லத்திற்றங்கி நம் குலப் பிரமுகர்களோடு குலமுன்னேற்றத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய பல முயற்சிகளைப் பற்றி யோசித்தனர். மாலை 5½-மணிக்கு, அவ்வூர்ச் செங்குந்தர்கள் பெருந் திரளாகக் கூடிச் சங்கப் பிரதிநிதிகளை மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்று வாழைத்தோட்

டத்தில் ஒரு பெருங் கூட்டம் கூடினார்கள். அங்கு மாணம்பதி திருப்புலிவனம் முதலிய கிராமங்களிலிருந்து வந்திருந்தவர்கள் உட்படச் சுமார் 350-க்குக் குறையாது குழுமியிருந்தனர்.

அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. கா. உ. பொன்னுசாமி முதலியார் முன்னுரை நிகழ்த்தித் தலைச்சங்கப் பிரதிநிதிகளை அறிமுகஞ் செய்த பிறகு, திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார், M.A.,L.T., மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் மா. பா. கந்தசாமி முதலியார் B.A.,B.E., முதலியவர்கள் தலைச் சங்கத்தின் நோக்கங்களை விளக்கிச் செங்குந்தர் வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படும் கிளைச் சங்கங்களுக்கும் தலைச் சங்கத்திற்கும் இருக்கவேண்டிய சம்பந்த முதலியவை இன்னதென்றும், நம் குலமுன்னேற்றத்தின் பொருட்டு வெளியிடப்பெறும்மித்திரனை ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்க வேண்டுமென்றும் பேசியபின்னர், அவ்வூர்ப் பிரமுகர்கள் பலரும் கலந்து யோசித்து, அநேக வருடங்கட்கு முன்னரே நிறுவப்பெற்று நம் குல முன்னேற்றத்தின் பொருட்டு உழைத்து வரும் உத்திரன்மேரூர் செங்குந்த குலாபிவிர்த்தி சங்கத்தைத் தலைச் சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக்கிக் கொள்வதென்றும், அதன் மூலமாய்த் தலைச் சங்கத்திற்கு வருடம் ஒன்றுக்கு ரூபாய் 20 கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அவைத் தலைவருக்கும் பிரசாரகர்களுக்கும் மாலை சூட்டிய பிறகு இரவு 10-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

### பெருநகர்.

மறுநாள் மாலை 2-மணிக்குப் பிரசாரகர்கள் மாணம்பதி திரு. சு. அருணாசல முதலியார் முதலிய பிரமுகர்களுடன் பெருநகருக்குச் சென்றார்கள். அவ்வூரார் மங்கள வாத்தியங்களுடன் அவர்களை வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். உடனே கூடிய கூட்டத்திற்கு திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவைத் தலைமை வகித்தார். அப்போது அவ்வூராரால் படித்துக் கொடுக்கப் பெற்ற வரவேற்புப் பத்திரமாவது:—

திங்களங் கண்ணிச் செஞ்சடைக் கடவுள்
மங்களங் கண்ணி வகுத்தபல் சாதியும்
தத்த மாசாரந் தலைநின் றுய்யச்
சித்த மாசாரச் செயாதறி வுறுத்தும்
நற் பத்திரிகை நாட்டினி லெங்கும்
பொற்பத் திரிகை புலங்கொளார் யாவர்
யாண்டுஞ் சிலைநிலை யெழுத்திய னம்புகழ்ப்
பூண்டுஞ் சிலையகம் பொலிவொரு பொலிவோ
ஆகையி னம்மை யப்ப னென்ன
ஓகையி னம்மை யோங்கு விக்கத்
தங்குந் தருமச் சார்புட னெல்லாச்
செங்குந் தருமன் சீர்பெற காடிப்
பின்னையிற் றென்னப் பேசரு வளஞ்செற்றும்
சென்னையிற் றென்னிந் திய செங்குந்த
மகாசன சங்கம் மாண்புறு நீறணி
நகாசன நிலையி னட்டின ரான்றோர்
வேண்டுசெங் குந்த மித்திரனெ னும்பெயர்
பூண்டுசெங் குத்திற் பொலிபத் திரிகை
தந்து காக்குந் தகையதற் கொப்புவின்
முந்து காக்கு மொழிய லாமோ
இன்னம் பலவா யிதுபோ னலங்கள்
பொன்னம் பலம்போற் புரிநன் னிலையது
சுதனின் சார்வாய்த் துலங்கும் வாழ்வுபோல்
இதனின் சார்வா யாமறிந் துய்யப்
பூங்குக னகனகப் புந்தியி லன்பு
தாங்கு கனக சபைச் சிந்தாமணி
கந்தசா மிக்கார் கலந்துடன் வரவே
கந்தசா மிக்கார்க் காத்தலி னென்னும்
தண்முக மதியஞ் சகடனை நன்னாள்
சண்முக சுந்தர சாந்தநின் வருகை
கண்டா நந்தங் கலந்த வுள்ளம்
கொண்டா நந்தங் குறையெல்லாங் கடந்தோய
கற்பொழி வாக்காக் காரிகை செயல்பெறச்
சொற்பொழி வாற்றுக தூய சுகுணநீ
என்று மதியு மிருக்கு நாள்
என்று மதிநலம் இசைந்து வாழியவே.

பெருநகர் 21—8—1927 இங்ஙனம்:
பெருநகர் கிராம செங்குந்தர்கள்.



திரு. ம. சண்முகசுந்தர முதலியார் பத்திரத்திற்குப் பிரதிநிதிகள் மூவர் சார்பாகவும் பதிலளிக்கு மாற்றான், வாசித்துக் கொடுத்த பத்திரத்தால் தம்மையும் தமது நண்பர்களையும் கௌரவப்படுத்தியதாக எண்ணாது, தங்களிடம் நம்பிக்கை வைத்துத் தாங்கள் மேற்கொண்டுள்ள செங்குந்த குல சேவையின் பொறுப்பை இன்னும் அதிகப்படுத்தி உற்சாகத்துடன் உழைக்க ஊக்கியதாகக்கூறிச்சங்கம், பத்திரிகை முதலியவற்றைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார். திருவாளர்கள். சு. பிச்சலிங்க முதலியார், மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய மூவரும் அவர் சொன்னதைத் தழுவிப் பேசினார்கள். அதன் பயனாகக் கிளைச் சங்கமொன்று ஆங்கு நிறுவுதல் அவசியமாயினும், அது மறு கூட்டத்தில் செய்தல் நலமென்றும், தலைச் சங்கத்திற்கு அவ்வூரிலிருந்து வருடந்தோறும் ரூபாய் 10 செலுத்தல் வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப் பெற்றன.

மாலை 6-மணிக்கு உற்சாகத்துடன் கூட்டம் கலைந்தது. பதினைந்து கனவான்கள் மித்திரனுக்குப் புதுச் சந்தாதாரராகச் சேர்ந்தனர்.

## மாஞ்சம்பதி.

பெருநகரில் கூட்டங் கலைந்து திரும்புவதற்கு முன்னரே இரண்டுமணி நேரமாக மாஞ்சம்பதியில் உள்ளூராரும், விசூர், தேத்துறை, தண்டரை, சேர்ப்பாக்கம் முதலிய கிராமங்களிலிருந்து வந்தவர்களும் பெருந் திரளாகக் கூடிச் சங்கப்பிரதிநிதிகளை எதிர்பார்த்திருந்தார்கள். மாலை ஆறுமணிக்குப் பிரசாரகர்கள் மூவரும் பல நண்பர்களுடன் வந்து சேர்ந்தனர். உடனே ஊரார் பலவித வாத்தியங்களோடு அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று சந்நதி வீதியில் இதற்கென அமைக்கப்பெற்ற பந்தரை அடைந்தனர். அங்கு மிக்க ஆர்வத்துடன் குழுமியிருந்தவர்களின் தொகை சுமார் 500-க்கு மேற்பட்டிருக்கும். திரு. மா. மு. பரமகுருநாத முதலியார் (Sanitary Inspector, Madras Corporation) அவர்களும், நமது சமூக முன்னேற்றத்தின் பொருட்டுத் தமது பொருள் நஷ்டத்தையும் தேக சிரமத்தையும் பொருட்படுத்தாது உழைத்துவரும் ஐயங்கார் குளம் திரு. சோ. இலக்ஷ்மண முதலியார் அவர்களும் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டம் திரு. மா. கனகசபை முதலியார் தலைமையின் கீழ் நடைபெற்றது. கடவுள் வணக்கமாக விசூர் திரு. மாணிக்க முதலியார் தேவாரமோதியபிறகு சங்கப்பிரதிநிதிகள் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பெற்றனர். அது வருமாறு:—

### வரவேற்பு நல்லுரை.

வருக, வருக, நமது செங்குந்தர்குல மாபெருந் தலைவர்களே! வருக.

**கல்வி பெருகிடக் கருதிடும் பெரியீர் !**

உலகின்கண் அறிவின்மையால் வறுமையில் பீடிக்கப்பட்ட நமது செங்குந்த குலமக்களின் நிலைமைக்குக் காரணம் கல்விக் குறைவென்பதை நன்குணர்ந்து தாங்கள் இச்சிற்றூரையும் ஒரு பொருட்படுத்தித் தாங்கள் உடற்சிரமங்களையும், கால நஷ்டங்களையும் சிந்தியாமல் ஈண்டு விஜயம் செய்த தங்கள் வரவு நல்வரவாகுக.

**மணிதரு பணிநிகர் மதியுடைப் பெரியீர் !**

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தைச் சென்னை மாநகரில் நிறுவிய ஞான்று முதல் தமது மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களாலும் உழைத்தும், மேற்படி சங்கத்துக்கு



வேண்டிய பொருளுதவி செய்தும், நம் சங்கக்கிளர்ச்சி நாளுக்கு நாள் பிறைச்சந்திரன் போல வளர்ச்சிபெற வேண்டுமென்று பேரவாவுடையவரும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரும், பெருஞ்சீரிய மூதறிவாளருமாகிய திருவாரூர் முனிசிபல் கௌன்சிலர் தி. நா. சபாபதி முதலியாரவர்களுக்கு எங்கள் நன்றியும் வந்தனமும் என்றும் உரியதாகுக.

**உரிமைக்குழைக்கும் உத்தம சீலர்காள் !**

நமது செங்குந்த குல முன்னேற்றத்திற்கென அருந்தொண்டாற்றித் தீவிர முயற்சியெடுத்துக் கொண்டிருக்கும் தாங்கள் அதிமிகப் பெருங் காருண்யத்திற்கும் நன்றி நினைவிற்கும் ஏற்ப உயர்தர சர்வ கலாசாலைகளில் பயின்று பட்டதாரிகளாய் விளங்கும் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ. எல். டி., திருவாளர் மா. பா. கந்தசாமி முதலியார் பி. ஏ. பி. இ. ஆகிய இவர்கள் பெருமை, நமது மாகாணத்திலுள்ள செங்குந்தகுல மக்களனைவரும் போற்றத் தக்கதொன்றும்.

**தருக்களை நிகர்த்த அருள்மிகு சீலர் !**

தற்காலம் இந்நாகரீக உலகத்தில் ஒவ்வொரு வகுப்பினரும் கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆசார சீர்திருத்தங்களிலும், அரசியல் ஆட்சிகளிலும் முன்னேற்றமடைந்து வருகிறபோது நம் குலமக்கள் மாத்திரம் வாளாவிருக்கின்றனரே எனப் பல்லாண்டுகளாகச் சிந்தித்து நம்குல முன்னேற்றத்திற்கு ஆதாரமான இச்சங்கமானது நிலை பெற்றொளிர அரும் பணியாற்றிவரும் சென்னை ஜெனரல் போஸ்டாபீஸ் திருவாளர் மா. அ. கனகசபை முதலியாரவர்களுக்கும் எங்கள் நன்றி என்றும் உரியதாகுக.

தமக்கெனச் சிறிதும் கைம்மாறு கருதாக் கருணையாளர்களாகிய உங்கட்கு ஆயுள் ஆரோக்யமும், நீடித்த புகழும், மேலாம் பதவியும் கிடைக்கவும், தாங்கள் நடாத்திவரும் நமது குலமித்திரன் நாடெங்கும் புகழ்பெற்றுலவவும், எல்லாம் செய்யவல்ல இறைவன் திருவருளை என்றும் இறைஞ்சுகின்றோம்.

தங்கள் அன்பிற் சிறந்த மாஞ்சம்பதி கிராமவாசிகளாகிய
செங்குந்தர்கள்.

தலைச் சங்கக் காரியதரிசியவர்கள் வரவேற்புப்பத்திரத்திற்கு மூவர்சார்பாகவும் தக்க பதிலளித்தனர். தலைவர் முன்னுரையின் பின், 1. "தலைச்சங்கத்தின் நோக்கங்களும் கிளைச்சங்கங்களின் அவசியமும்", 2. "செங்குந்த மித்திரன்", 3. "தலைச்சங்கத்தின் வேலைகள்" (கல்வி, பிரசாரம் முதலியன, 4. "மாஞ்சம்பதியில் கிளைச்சங்கம் ஸ்தாபித்தல்", 5. "தலைச் சங்கத்தில் நம்பிக்கை வைத்தல்", 6. "நமது முன்னேற்றம்" என்னும் விஷயங்களைப்

பற்றி முறையே திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், கா. உ. பொன்னுசாமி முதலியார், மா. அ. கனகசபை முதலியார், சு. ஆறுமுக முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T., மா. பா. கந்தசாமி முதலியார், B.A. B.E.; ஆகிய அறுவரும் அருமையான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு மாணும்பதியில் கிளைச்சங்கமொன்று நிறுவுதல் வேண்டுமென்றும், அது மாணும்பதி சேங்குந்தர் சங்கம் என வழங்குதல் வேண்டுமென்றும், அதில் விசூர், தண்டரை, தேர்த்துறை, சேர்ப்பாக்கம் ஆகிய கிராமங்களில் வதியும் செங்குந்தர்களும் அங்கத்தினராகலாமென்றும், இக்கிளைச்சங்கம் வருடந்தோறும் தலைச்சங்கத்திற்கு ரூபாய் 30 செலுத்த வேண்டுமென்றும், தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்களை மறு கூட்டத்தில் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென்றும், தீர்மானித்து,

| | | | |
|---|---|---|---|
| சந்நிதித் தெரு | 1. | திரு. சு. அருணாசல முதலியார் | அவர்கள். |
| ,, | 2. | அ. துரைசாமி முதலியார் | ,, |
| ,, | 3. | வ. இரத்தின முதலியார் | ,, |
| மேலைத் தெரு | 4. | தா. சுப்பராய முதலியார் | ,, |
| ,, | 5. | சொ. வேணுகோபால் ஷ | ,, |
| ,, | 6. | கு. முருகப்ப முதலியார் | ,, |
| ரோட்டுத் தெரு | 7. | க. காளத்தி முதலியார் | ,, |
| மந்தைவெளித் தெரு | 8. | ர. பொன்னுசாமி முதலியார் | ,, |
| மேட்டுத் தெரு | 9. | மு. கந்தசாமி முதலியார் | ,, |
| தேர்த்துறை | 10. | த. முருகப்ப முதலியார் | ,, |
| விசூர் | 11. | த. சுந்தர முதலியார் | ,, |
| ,, | 12. | அ. பச்சையப்ப முதலியார் | ,, |
| தண்டரை | 13. | அ. சுந்தர முதலியார் | ,, |
| ,, | 14. | மு. அருணாசல முதலியார் | ,, |
| சேர்ப்பாக்கம் | 15. | கா. மாசிலாமணி முதலியார் | ,, |

முதலியவர்களை நிர்வாக சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தார்கள். உபந்யாசகர்களுக்குப் பூமாலை சூட்டப் பெற்றபின்னர், இரவு 11-மணிக்கு நவீன ஊக்கத்துடன் கூட்டம் கலைந்தது.

## அம்மையப்பட்டு.

மறுநாள் (22-8-27) திங்கட்கிழமை மாலை 4-மணிக்குச் சங்கப் பிரதிநிதிகளும் திருவாளர்கள் சு. அருணாசல முதலியார், ச. தீர்த்தகிரி முதலியார், ச. பாலசுந்தர முதலியார், வே. அண்ணாமலைமுதலியார், இ. சம்பந்தமூர்த்தி முதலியார் முதலியவர்களும், வந்தவாசியடுத்த அம்மையப்பட்டை அடைந்து, அவ்வூர்ப் பெரிய



தனக்காரரும், யூனியன் போர்டு மெம்பருமாகிய உயர்திருவாளர் சு. பாலசுந்தர முதலியார் அவர்கள் வீட்டில் வரவேற்கப்பெற்று, 6-மணிக்குத் தேவாரபாராயண சபையார் இன்னிசைக் கருவிகளுடன் திருமுறை ஓதிவர வீதி வலமாகச் சென்று ஸ்ரீமுருகப் பெருமான் சந்நிதியை யடைந்து தீபதூப ஆராதனைகளோடு இறைவனைத் தரிசித்தார்கள். அங்கு கூடிய பெருங் கூட்டத்திற்கு திருவாளர் மாணிக்கமுதலியார் அவர்கள் தலைமை வகித்தார். சங்கப்பிரதிநிதிகளுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்த பிறகு, தலைச்சங்கக் காரியதரிசியவர்கள் வரவேற்புப் பத்திரத்திற்குத் தக்கபதில் கூறிச் சங்கம் முதலியவற்றைக் குறித்துக் கேட்டார் மனத்தைப் பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்குமாறு அரியதொரு சொற்பொழிவை நிகழ்த்தினார். திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியாரும் வந்தவாசி போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் திரு. கோவிந்தராஜ முதலியார் அவர்களும், நங்குல முன்னேற்றத்தைக் குறித்துப் பேசிய பின்னர்ச் சில முக்கியமானவர்கள் அக்கூட்டத்திற்கு வர நேராததால் கிளைச்சங்க நிறுவுதல் முதலியவற்றை மறுதினம் கூடும் கூட்டத்தில் தீர்மானித்துத் தலைச்சங்கத்திற்குத் தெரிவித்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது. தலைவர் தமது முடிவுரையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பல வேடிக்கைக் கதைகளையும் மேற்கோள்களையும் எடுத்துக் காட்டிக் கூட்டத்தை உற்சாகப்படுத்தினர். மித்திரனுக்குப் பல புதுச்சந்தாதாரர் சேர்ந்தனர். கூட்டம் 9-30-மணிக்குக் கலைந்தது.

## காஞ்சிபுரம்.

மறுதினம் 23-8-27 செவ்வாய்க்கிழமை காலை 8-மணிக்குத் திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியாரும், மா. அ. கனகசபை முதலியாரும் காஞ்சீபுரம் வந்து, ஆங்குள்ள செங்குந்த குல ஜவுளி வியாபாரிகளைக் கண்டு, மகா ஜனசங்கத்திற்கு நிலைத்த வருவாய் ஒன்று செய்து கொடுக்கும்படிக் கேட்க, வியாபாரிகள் யாவரும் கலந்து 10-9-27ல் கூடி மளிகைக்கு இவ்வளவு மாத மாமூல் நன்கொடையாக அளிப்பதென ஷை சங்கத்தின் அமைச்சர்களுக்கு வாக்களித்து, 17-9-27-ல் ஆவணி மாதத்திய தொகையையும் செலுத்திவிட்டார்கள். அவர்கள் குலாபிமானம் (மிகவும் பாராட்டி) மற்றைய செங்குந்த வியாபாரிகளால் பின்பற்றற்குரியதேயாம். அவர்கள் அளித்த நன்கொடை விவரம் மற்றோரிடத்தில் காண்க.

## ஐயங்கார்குளம்.

மாலை 5-மணிக்கு திரு. ம. சண்முகசுந்தர முதலியாரும், திரு. மா. அ. கனகசபை முதலியாரும், காஞ்சீபுரம் திரு.

பி. செ. மாணிக்கவாசக முதலியாருடன் ஐயங்கார் குளம்சென்றார்கள். 7 மணிக்கு வித்வசிரோமணியும், பிரபல சோதிடருமாகிய உயர்திருவாளர் நாராயணசாமி முதலியார் அக்கிராசனத்தின்கீழ்த் திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், மா. அ. கனகசபை முதலியார் ஆகிய மூவரும் "தலைச்சங்கத்தின் நோக்கம்," "கிளைச்சங்கத்தின் அவசியம்," "பத்திரிகை," "கல்வி," முதலிய விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியபின், தலைவருக்கும் பிரசாரகர்களுக்கும் மாலைசூட்டி இரவு 10½-மணிக்குக் கூட்டம் கலைந்தது. மித்திரனுக்குப் பல புதுச்சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். இக்கூட்டத்தில், கிளைச்சங்கம் ஒன்று நிறுவுதல் அவசியமென்றும், அதைப்பற்றி மறுகூட்டத்தில் யோசித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றன.

• உத்திரன்மேரூர், மானம்பதி (சுற்றுக்கிராமங்கள் உட்பட), பெருநகர், அம்மையப்பட்டு, ஐயங்கார் குளம் ஆகிய கிராமங்களிலுள்ள செங்குந்தர்கள் சங்கப்பிரதிநிதிகளுக்குச் செய்த மரியாதை, உபசாரம் முதலியவற்றையும், பெரியோர், சிறியோர், ஆண் பெண் யாவரும் காட்டிய ஊக்கத்தையும் குதூகலத்தையும், கூட்டம் கலைய இரவில் வெகு நேரமாயினும் தங்கள் உணவையும் பொருட்படுத்தாது முடிவு வரையில் கூட்டத்தை விட்டகலாது உற்சாகத்தோடு இருந்ததையும் நோக்குங்கால், நம்மவர்கள் குல முன்னேற்றத்தைக் குறித்துத் தற்போது உண்மையாகவே மிகுந்த ஊக்கங்கொண்டுள்ளார்களென்றே தெரிகிறது.

இச்சுற்றுப் பிரயாணத்தில் சங்கப்பிரதிநிதிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சாராம்சமாவது:—

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடைய வேண்டிச் சங்கங்கள் பல நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குலமக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கின்றனர். இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்கம், செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மையடையும் வழியைத் தேடிவருகின்றது. ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளிக்கின்றது. நமது குலமக்களிடையே கல்வி, ஒற்றுமை, பரஸ்பர உணர்ச்சி முதலியன பெருகும்வண்ணம் செங்குந்தர் வசிக்கும் கிராமங்கள் தோறும் கிளைச்சங்கங்கள் ஸ்தாபித்துவருகின்றது. செங்குந்தமித்திரன் என்னும் பத்திரிகையை நடத்துகின்றது. செங்குந்தரின் பூர்வ சரித்



திரத்தைச் செவ்வனே ஆராய்ச்சிசெய்வதும் தென்னிந்தியாவில் செங்குந்தர் ஆதிக்கத்தில் இருக்கும் ஆலயங்களையும், மடங்களையும், சத்திரங்களையும், சீர்பெற ஆதரிப்பதும், செங்குந்தருக்கு நெடுங்காலமாக உரித்தான கைத்தொழில்களையும், வியாபாரங்களையும், மேன்மேலும் ஓங்கச்செய்வதும், அரசாங்கத்துச் சபைகளில் செங்குந்தர்களும் பிரதிநிதித்துவம் அடைய மன்றாடுவதும், செங்குந்தர் சிறப்பை நிலைநாட்டவல்ல நூல்களையும் அவற்றின் உரைகளையும் பதிப்பித்தலும், குலமுன்னேற்றத்திற்கென ஒரு மாபெரு மூலநிதியைத் திரட்டி வைப்பதும், இன்னோரன்ன குலத்தொண்டுகளைச் செய்துவரலும், இம்மகாஜன சங்கத்தின் இதர நோக்கங்களாம். இவை நிறைவேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும், உதவியும், ஆதரவும், அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வதியும் கிராமங்கள்தோறும் பிரசாரவேலை செய்து வருகின்றனர்.

கிளைச்சங்கங்களே தலைச்சங்கத்தின் அங்கங்கள்; அவற்றின் பிரதிநிதிகளின் கூட்டமே தலைச்சங்கத்தின் பொதுஜனக் கூட்டமாம்; அப் பிரதிநிதிகளுக்குள்ளாகவே தலைச்சங்கத்தின் காரியதரிசி முதலிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆகையால்கிளைச்சங்கங்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகத்தலைச்சங்கம் யாதொன்றும் செய்யமுடியாது. ஆகவே தலைச்சங்கத்தினிடத்துச் செங்குந்தர் யாவரும் முழுநம்பிக்கை வைக்கவேண்டும். மற்றச் சங்கங்களைப் போலாது ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் அவ்வூர்க் கிளைச்சங்கத்திற்கு அங்கங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பத்திரிகை நமது முன்னேற்றத்திற்கு மிக முக்கியமாய் வேண்டப்படுவனவற்றுள் ஒன்று. பத்திரிகைகளின் தொகை எத்தேசத்தில் மிகுந்திருக்கிறதோ அத்தேசமே பல துறைகளிலும் முன்னேற்றமடைந்ததாகும். நமது மித்திரனை ஒவ்வொரு செங்குந்தரும் கட்டாயமாய் ஆதரித்தல் வேண்டும் என்பதும், நம் குலாபிவிருத்திக்கு அவசியமான பற்பல விஷயங்களுமாம்.

பல வருஷங்களாக நம்குலமுன்னேற்றத்திற்காக உழைத்து வருபவராகிய உத்திரன்மேரூர் திரு. கா. உ. பொன்னுசாமி முதலியார், திரு. கதிர்வேலு முதலியார், திருவாளர்கள் மானம்பதி பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்ட் சு. அருணாசல முதலியார், ச. தீர்த்தகிரி முதலியார், அ. இரத்தின முதலியார், வே. அண்ணாமலை முதலியார், இ. சம்பந்தமூர்த்தி முதலியார், சு. ஆறுமுகமுதலியார், உடல் தளர்ந்தும் ஊக்கந்தளராத பெருநகர் ப. கோவிந்த முதலியார், தமிழ் வித்வசிரோமணியாக விளங்கும்

ப. தில்லை முதலியார், ப. சிதம்பர முதலியார், அம்மையப்பட்டு பெரியதனக்காரரும், யூனியன் போர்டு மெம்பருமாகிய சு. பால சுந்தர முதலியார், தனக்கென வாழாத் தகைமையாளராகிய ஐயங் கார் குளம் சோ. இலக்ஷ்மண முதலியார், கல்விக் களஞ்சியமாகிய நாராயணசாமிமுதலியார், நா. ஒதியப்ப முதலியார், பிரதிநிதிகளுடன் ஆங்காங்கு சென்று பிரசாரம் செய்துவந்த உண்மையபிமானி பி. செ. மாணிக்க வாசக முதலியார் முதலியவர்களும், மற்றும் பொதுவாக மேற்படி கிராமங்களிலுள்ள நம் குலச் சகோதரர்களும், மிகுந்த ஊக்கத்துடன் சங்கப் பிரதிநிதிகளை வரவேற்று வேண்டிய சௌகரியங்கள் செய்து உபசரித்ததன்றி, அவர்கள் வந்ததன் நோக்கங்களையும் உடனிருந்து பூர்த்தி செய்து வைத்ததற்காக அவர்களுக்கு மகாஜன சங்கத்தார் மிகுந்த நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## செங்குந்த வாலிபர் சங்கங்கள்.

### சென்னை, மயிலாப்பூர், காஞ்சீபுரம்.

ஒட்டக்கூத்தர் திருநாள் நிகழ்ந்த வாரத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில், ௸ சங்கத்தின் அமைச்சர்களின் முயற்சியால், சென்னையிலும், மைலாப்பூரிலும், காஞ்சிபுரத்திலும் தனித்தனி செங்குந்த வாலிபர் சங்கங்கள் நிறுவப் பெற்றன. இச் சங்கங்களில் அங்கத்தினராக உள்ளவர் முப்பத்தைந்து வயதுக்கு மேற்படாத செங்குந்தர்கள். ௸ சங்கங்களின் முக்கியமான உத்தியோகஸ்தர்களின் விவரம்:—

சென்னை.

தலைவர்:—திரு. ம. சண்முகசுந்தரமுதலியார், எம். ஏ., எல். டி.
துணைத்தலைவர்:—திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி. ஏ., பி. இ.
காரியதரிசிகள்:—திரு. க. வச்சிரவேலு முதலியார், (பி. ஏ., வகுப்பு மாணவர்.)
திரு. ஈ. சிங்காரவேலு முதலியார், (பி. ஏ. வகுப்பு மாணவர்.)

காஞ்சீபுரம்.

தலைவர்:—திரு. ம. த. முருகேச முதலியார். (திருவாளர். மத்தூர் சாமிநாத முதலியார் அவர்களது இளைய சகோதரர்.
துணைத்தலைவர்:— திரு. திரு. வி. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள், காஞ்சீபுரம் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்.

[மற்றைய உத்தியோகஸ்தரின் பெயர்கள் மறு சஞ்சிகையில் வரும்.]

## ஒட்டக்கூத்தர் திருநாள் கொண்டாட்டம்.

### மைலாப்பூர் செங்குந்த வாலிபர் சங்கஸ்தாபனம்.

**நாளது செப்டெம்பர் ௴ 7௳ புதன்கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை மைலாப்பூர் வெள்ளீசுவரர் ஆலயத்தில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில், கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் திருநாள் கொண்டாட்டத்தின் பொருட்டு ஒரு பொதுஜனக் கூட்டம் நடைபெற்றது.**



அச்சமயத்தில் திரு. K. முனுசாமி முதலியார் அவர்கள் அவைத் தலைமை வகிக்க, திருவாரூர் முனிசிபல் கௌன்சிலர் திரு. T. N. சபாபதி முதலியார் அவர்களும், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்தர கலாசாலை ஆங்கில ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களும், முறையே (1) "ஒட்டக்கூத்தர்", (2) "செங்குந்தர் கடமை" என்னும் விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

திரு. M. சரவண முதலியார் அவர்கள் மைலாப்பூர் செங்குந்த வாலிபர் சங்கஸ்தாபனத்தைப்பற்றிக் கொண்டுவந்த தீர்மானம், கூட்டத்தினரால் ஏக மனதாய் நிறைவேற்றப்பெற்று, அச் சங்கத்திற்குக் கீழ்க்கண்டவாறு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்:—

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | உயர் திருவாளர். | M. தனக்காளத்திழூ | அவர்கள் | போஷகர்கள். |
| (2) | ,, | A. விஜயரங்கழூ | ,, | போஷகர்கள். |
| (3) | ,, | S. குழந்தைவேலுழூ | ,, | தலைவர் |
| (4) | ,, | K. முனுசாமிழூ | ,, | உபத்தலைவர் |
| (5) | ,, | M. சரவணழூ | ,, | காரிய தரிசிகள் |
| (6) | ,, | M. K. பாலசுந்தரழூ | ,, | காரிய தரிசிகள் |
| (7) | ,, | M. விநாயகழூ | | பொக்கிஷதாரர் |
| (8) | ,, | K. மாணிக்கழூ | | பொக்கிஷதாரர் |
| (9) | ,, | P. M. முனுசாமிழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (10) | ,, | இரத்தினவேலுழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (11) | ,, | புனிதவேலுழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (12) | ,, | M. சம்பந்தழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (13) | ,, | N. சீனிவாசழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (14) | ,, | T. துரைசாமிழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (15) | ,, | P. குப்புசாமிழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (16) | ,, | பாலசுந்தரழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (17) | ,, | P. A. கதிர்வேலுழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (18) | ,, | M. P. தியாகராஜழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |
| (19) | ,, | S. காளத்திழூ | ,, | நிர்வாக சபை அங்கத்தினர். |

### மணக்குடி.

கூத்தர் பெருமானின் ஜனன பூமியாகிய மணக்குடி அண்ணாமலையார் மடத்தில் செங்குந்தர் தேவார கோஷ்டி சங்கத்தாரால் சென்ற ஆவணி மாதம் 22-ந் தேதி புதன்கிழமை பகல் அடியார்களுக்கு அன்னமிட்டும் அன்றிரவு தமிழ் வேத பாராயணம் செய்தும் கூத்தர் பெருமானின் திருநாள் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டதென்று தேவார கோஷ்ட்டி மாணவர் வயி. காளிமுத்து முதலியார் எழுதுகிறார்.

## மாப்பிள்ளைக் குப்பம்.

மாப்பிள்ளைக் குப்பம் செங்குந்த முதலியார் மகாஜன சங்கத்தாரால் சென்ற ஆவணி மாதம் 22-ம் தேதி 200 ஏழை ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பெற்று அன்று மாலை 6-மணிக்குக்கூத்தர் பெருமானின் திவ்ய சரித்திரத்தைத் திருவாளர் S. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் விரிவாக உபந்யசிக்கப் பெற்று வாழ்த்துக் கூறி சந்தன தாம்பூலம் அளிக்கப்பெற்று நமது குல திலகராகிய ஒட்டக்கூத்தர் பெருமானின் திருநக்ஷத்திர வைபவம் இனிது கொண்டாடப் பெற்றது என மேற்படி சபை காரியதரிசி திரு S. சுந்தர முதலியார் எழுதுகிறார்.

## திருவாரூர்.

திருவாரூர் செங்குந்த மகாஜன சங்கத்தாரால் சென்ற ஆவணி மீ 22-ந் தேதி சிரச்சிங்காசனாதிபதியின் திருநக்ஷத்திர வைபவம் வெகு விமரிசையாய் நடைபெற்றதுடன், நமது கவிச்சக்கிரவர்த்தியின் திவ்யசரித்திரமும் உபந்யசிக்கப் பெற்றதெனச் சங்கக் காரியதரிசி யெழுதுகிறார்.

## திருநாகேஸ்வரம்.

இவ்வூர் செங்குந்த மகாஜன சபையின் ஆதரவில் சபைத் தலைவர் வ. மு. ந. பொன்னம்பல முதலியாரவர்கள் கிருகத்தில் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரின் குரு பூஜை மகோத்ஸவம் சென்ற ஆவணி மாதம் 22-ந் தேதி கொண்டாடப்பட்டதோடு, ஏழைகளுக்கும் அடியார்களுக்கும் அன்னம் அளிக்கப் பட்டதென்றுசபையின் உபகாரியதரிசி திரு செ. சு. மு. மருதப்ப முதலியார் எழுதுகிறார்.

## இலங்கைக் கரவெட்டி கிழக்கு.

கரவைச் செங்குந்த குல சங்கத்தாதரவில் சென்ற ஆவணி மாதம் 22-ந் தேதி நம் குலதிலகராகிய ஒட்டக்கூத்தரின் திருநக்ஷத்திரத்தன்று அப்பெரியாரின் சரித்திரத்தைப்பற்றி விளக்கமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் திரு மு. கதிர்காம முதலியாரவர்களாலும் க. சின்னதம்பி முதலியாரவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு, அவண் குழுமி இருந்த சபையோர்களுக்குச் சிற்றுண்டி தாம்பூல முதலியன அளிக்கப்பட்டுச்சபை இனிது நிறை வேறியது என்று சங்க மானேஜர் வி. கே. சின்னத்தம்பி முதலியார் எழுதுகிறார்.

## காட்டேர்

இவ்வூர்ச் செங்குந்த மகா ஜனங்களால் ஒட்டக்கூத்தர் திருநக்ஷத்திரத்தன்று ஏழைகளுக்கு அன்னமளித்தும், கூத்தர் பெருமானின் திருஉருவச் சுவர்ணவிக்கிரத்தை அலங்காரம்செய்து



பல்வகை வாத்திய கோஷங்களுடன் திருவீதி வலம் வந்தும், அன்னோரின் சரித்திர பிரசங்கங்களை இன்னிசைக் கருவிகளுடன் உபந்யசித்தும் கவிச்சக்ரவர்த்தியின் திருநாள் கொண்டாடப் பெற்றதோடு, அன்று அவ்வூரில் செங்குந்தர் சங்கமொன்று திரு வாளர் ச. நாகலிங்க முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நிறுவப் பெற்றிருக்கிறதென்று சங்கக் காரியதரிசி சா. இராஜு முதலியார் எழுதுகிறார். சங்க அமைப்பு அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

## மானம்பதி.

இவ்வூர்ச் செங்குந்த குலமக்கள் கூத்தர் பெருமானின் திருஉருவப்படத்தை அலங்கரித்துப் பல வாத்திய கோஷத்துடனும் தேவார கோஷ்டியுடனும் ஊர்வலம் வந்து ஒட்டக்கூத்தரின் திருநாளைக் கொண்டாடியதுடன், திருவாளர் அ. பசுபதி முதலியார் அவர்களால் கூத்தரின் சரித்திரம் விரிவாக உபந்யசிக்கப்பெற்றது என திருவாளர் ப. ச. தீர்த்தகிரி முதலியார் எழுதுகிறார்.

## சென்னை, திருவல்லிக்கேணி.

இவ்வூர்ச் செங்குந்த கோட்டத்திலமர்ந்திரானின்ற ஸ்ரீ முருகப்பெருமானின் மகா மண்டபத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முயற்சியாலும்உள்ளூர்ச் செங்குந்தகுலமக்களின் முயற்சியாலும் ஒட்டக்கூத்தரின் திருநாள் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் திருவாளர் மா. அ. கனகசபை முதலியார் அவர்களாலும், திருவாளர் க. வச்சிரவேல் முதலியார் அவர்களாலும், சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுச் சந்தன தாம்பூலம் வழங்கி வாழ்த்துக் கூறிச் சபை இனிது முடிவுற்றது.

## உத்திரன்மேரூர்.

7-9-27 இன்று மாலை 5-மணிக்கு மேல் இவ்வூர்ச் செங்குந்தர் சங்க ஆதரவில், தேவார பக்தஜன சபை கூடத்தில் செங்குந்த குலத்தவரின் வீரச்செயலை உலகத்தவருக்கு விளக்கியவரும் கவிச் சக்கிரவர்த்தியுமாகிய ஒட்டக்கூத்தர் பெருமானது திருநக்ஷத்திரத்தினைக் கொண்டாட வேண்டிய அவசியத்தினையும் அப் பெரியாரின் பிரபாவத்தினையும், பற்றி சங்க அமைச்சர் விளக்கி உபந்யசித்தார். ஊரிலுள்ள செங்குந்த குலமக்கள் உற்சாகத்துடன் கேட்டு உவக்க இரவு 8-மணிக்கு மங்களகரமாகக் கூட்டம் முடிவுபெற்றது என்று கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் எழுதுகிறார்கள்.

## திருமருகல்

ஸ்ரீ ஷண்முகாநந்த சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் 7-9-27ல் ஸ்ரீகூத்தர் பெருமானின் திருநாள் ஸ்ரீஷண்முகநாதன்

சன்னிதியில் ஸ்ரீமான் வயி. சா. இரத்தினசபாபதி முதலியார் பொருளுதவியால் நடைபெற்றது. அன்று மாலை 6-மணிக்கு நம் குலதெய்வமாகிய ஷண்முகப் பெருமானுக்கு ஆராதனை செய்யப்பட்ட பின்னர் குந்தமக்களின் பெருங்கூட்டமொன்று சன்னிதியில் கூட்டப்பெற்று அக்கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ சிதாநந்த சுவாமி அவர்கள் அக்கிராசனம் வகித்து முகவுரை கூறியபின்னர், புலிசை ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளின் மாணவர்களில் ஒருவராகிய கும்பகோணம் திருவாளர் பி. எஸ். கஞ்சமலைவர்மா அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து "ஒட்டக்கூத்தர்" என்னும் விஷயத்தைப்பற்றி கடல் மடை திறந்தாப்போல் 3-மணி நேரம்வரை செங்குந்த குலமக்களின் செவியைத் துளைத்துக் கல்லான நெஞ்சமும் கரையும்படி அமிர்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உபந்யாசகர் பிரசங்க ஆரம்பத்தில் உயர்ந்த மனிதப் பிறவியைப் பெற்றுள்ள நாம் பக்தியில் ஈடுபட வேண்டியது அவசியமென்றும், அப் பக்திக்குக் கல்வி வேண்டற்பாலதவசியமென்றும், கல்வியறிவினாற் சிறந்து புலவர் பெருமக்களாய் விளங்கிய பெரியாரிடத்து நாம் அன்பு செலுத்தவேண்டிய தவசியமென்றும், கூறி அத்தகைய புலவர் கூட்டத்துள் சிரோரத்தினமாய் விளங்கிய கவிச் சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரின் பெருமையைப் பற்றியும், அவருக்குச் சரஸ்வதியின் அநுக்கிரகத்தால் பாலப் பருவத்திலேயே கவி பாடும் சக்தி வாய்ந்திருந்ததென்றும், பின்னர்ச் சோழமன்னருக்கு ஆஸ்தான வித்வானாய் வீற்றிருந்த அரும்பெரும் சிறப்புகளைப் பற்றியும், அவரைப் பற்றி தற்காலம் வழங்கிவரும் பல நம்பத்தகாத சரித்திரங்களைத் தக்க காரணங்களால் கண்டித்தும், இப்புலவர் ஜீவகாருண்யம் நிரம்பப் பெற்றவரென்றும், குலாபிமானமுடையவரென்பதையும் நிரூபித்து, இப்புலவர் ஈட்டி எழுபது பாடிய சிறப்பையும், அதற்கு சிரச்சிங்காதனம் கொடுத்துப் புகழ்பெற்ற செங்குந்தர்களின் வீரத்தன்மையையும், அவர்களின் பெருமையையும், அவர்தம் வம்சவரலாற்றின் னுயர்வையும், தற்காலமவர்கள் அடைந்துள்ள நிலையையும், இவர்கள் சீக்கிரம் முன்னேற்றமடைய வேண்டிய அவசியத்தையும் பற்றித் தெளிவாய் விளக்கியும், இடை இடையே செங்குந்தப் புலவர்களாகிய இரட்டையர், படிக்காசுப் புலவர் முதலான பல புலவர்களைப்பற்றியும் நன்கு விளக்கிக் காட்டினார். பின்னர் அக்கிராசனர் முடிவுரை கூறுகையில், உபந்நியாசகரின் சொல் வன்மையைப்பற்றியும், நூல் ஆராய்ச்சியைப்பற்றியும், தாமும் அவருடைய உபந்நியாசத்தைக் கேட்டானந்திக்கும் பாக்கியம் பெற்றதைப்பற்றியும் சிறப்பித்துப்பேசி அமர்ந்தார். பின் காரியதரிசி சங்கத்தின்சார்பாக உபந்நியாசகருக்கும் அக்கிராசனருக்கும் வந்தனோபசாரம் கூறி, இத்தகைய வைபவங்களைக் கிளர்ச்சிசெய்கின்ற



பத்திராதிபர் ஸ்ரீமான் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களுக்கும் ஸ்ரீமான் தி. நா. சபாபதி முதலியார் அவர்களுக்கும் நன்றியறிதலைச் செலுத்தியபின், அவையின்கண் குழுமி இருந்த அன்பர்களனைவருக்கும் சந்தன தாம்பூலம் முதலியன வழங்கி, இரவு 10-மணிக்குத் தமிழ்வேத பாராயணத்துடன் சபை நிறைவேறியது என்று சபைக்காரியதரிசி திரு சி. தி. தாண்டவராய முதலியார் எழுதுகிறார்.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் விசேஷ நிருவாக சபைக்கூட்டத்தின் தீர்மானம்.

### போலிச் செங்குந்தர்கள்.

கோயம்புத்தூர் செங்குந்த மகாஜன சங்கமென்னும் போலிப் பெயர்கொண்ட ஒரு சங்கத்தின் கௌரவ காரியதரிசி, 1927 வருஷம் ஆகஸ்டு மாதம் 16-ம் தேதி சென்னைச் சட்டசபை அங்கத்தினர் எல்லோருக்கும், தேவஸ்தான பரிபாலனபோர்டார் முதலியவருக்கும் அனுப்பியுள்ள ஒருமனுவைக்குறித்து அவசரமாகயோசிக்கும்பொருட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தின் நிர்வாக சபையினது விசேஷக்கூட்டம் ஒன்று நாளது செப்டம்பர் மாதம் 21-ந் தேதி கூடிற்று. அந்த மனுவில் காணப்படும் சில தொடர்மொழிகள் பெருந்தொகையினராயுள்ள உண்மைச்செங்குந்தர்களது கௌரவத்திற்கும்பண்டைப்புகழுக்கும்மிகுந்தபங்கத்தை விளைவிப்பனவாயிருக்கிறபடியால், கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசி வகுப்பார் யாதொரு ஆதாரமுமின்றி இப்பெயரைத் தமக்கு உபயோகப்படுத்திக் கொள்வதைக் கண்டிப்பதற்குத் தகுந்தமுயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும் என்றும்; அனாதிகாலமாய்ச் செங்குந்தர் அல்லது கைக்கோளர் என்னும்பெயரால் தென்னிந்தியாவில் சுமார் ஆறு லக்ஷத்துக்கு மேற்பட்டு நெசவுத் தொழிலை மேற்கொண்ட தமிழர்கள் உண்டென்பதையும் அவர்கள் உலகத்தில் வசிக்கும் நாகரீகமுள்ள எவ்வகுப்பினருக்கும் பெருமையையும் கீர்த்தியையும் தரத்தக்க வீரத்தன்மை பொருந்திய முன்னோர்களையும், ஒழுக்கத்தையும், மிகுந்த பக்தியையும், கர்னபாரம்பரியங்களையும், பிரபந்தங்களையும் உடையவர்களென்பதை, மேற்படி மனு அனுப்பப்பட்ட சீமான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் அறிவிக்க வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிகப்பெற்றது.

எவ்வகுப்பினரோடும் ஞாயமாகவும், வெளிப்படையாகவும் சேர்த்துச் சொல்ல முடியாதவாறு வெட்கமான முறையில் வசித்துவரும் தமிழ்த் தேவதாசிகளின் சந்ததியார், தங்கள் பிறப்பிற்குரிய இழிவை மறைக்கும் பொருட்டு உழவுத்தொழிலை

மேற்கொண்ட வேளாளர், அல்லது நெசவுத் தொழிலை மேற்கொண்ட செங்குந்தர் ஆகிய ஜனத்தொகையில் மிகுந்த இரண்டு வகுப்பினரது பெயரை மாத்திரமேயன்றி அவர்களின் கௌரவ பட்டங்களையும் வைத்துக்கொள்ளுதல் இயற்கையே. (தென்னிந்தியாவிலுள்ள ஜாதிகளையும் கூட்டத்தவரையும் பற்றித் தர்ஸ்டன் துரை அவர்கள் எழுதிய இரண்டாம் வால்யம் 127 ஆம் பக்கம் பார்க்க) ஆனால், இவ்வாறு அவர்கள் செய்துவருவது, இப்போது அவர் கலந்துகொள்ளப் பிரயத்தனம்படும் வகுப்பினர்களுக்குப் பொதுவாகவும், தங்களைச் சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்யும் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசி வகுப்பினர்கள் செங்குந்தரென்னும் பெயர் தமக்குரியதெனப்பாவித்தலின், தென்னிந்தியாவிலுள்ள உண்மைச்செங்குந்தர்களுக்குச் சிறப்பாகவும், இழிவைத் தரத்தக்கதாயிருக்கிறது. ஆகையால், நெசவுத்தொழிலையும் நல்லொழுக்கத்தையும் அன்றி, கோயம்புத்தூர் சங்கத்தாரது மனுவில் கண்டுள்ள இழிந்த ஒழுக்கத்தை ஒருபோதும் மேற்கொண்டிராத உண்மைச் செங்குந்தர்களுக்கும் தாசித்தொழில் செய்யும் இனத்தவர்க்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று பொது ஜனங்களுக்கு அறிவிப்பது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பெருங்கடமையாக இருக்கிறது.

வேசியரென வாழும்படிப் பெண்களைக் கோயில்களுக்குத் தேவதாசிகளாக விடுகிற வழக்கம் ஒவ்வொரு கைக்கோளக் குடும்பத்திலும் உண்டென்று கோயம்புத்தூர் சங்கத்தார் சொல்லுவது முற்றும் பொருந்தாதென்பது 1881 வருஷத்திய கோயம்புத்தூர் ஜில்லா சென்ஸஸ் ரிபோர்ட்டில் காட்டியுள்ள கீழ்க்கண்ட விபரத்தால் விளங்கும். தேவதாசி வகுப்பைச் சார்ந்தோர் தங்கள் வெட்ககரமான வாழ்வால் உண்டாகும் இழிவை அறிந்துகொள்ளக் கூடாதிருந்த காலமானபடியால், அக்காலம் நாம் வெளிப்படுத்தக்கருதும் விஷயத்தைச் சரியாகக்காட்டுமெனக் கருதிய 1881-ம் வருஷத்தை எடுத்துக்கொண்டோம்.

1881 வருஷத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவில் கைக்கோள இனத்தையும் சார்ந்த 21796 புருஷர்களும் 24211 பெண்களும் இருக்க (பக்கம் 39), பல தேவதாசி இனத்தைச் சேர்ந்த தாசிகள் 1089 பேரே இருந்தனர் (பக்கம் 62). கோயம்புத்தூர் சங்கத்தார் சொல்லுகிறபடி, அந்த ஜில்லாவிலுள்ள கைக்கோளர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு விபசாரத்துவம் சகசமாய் இருந்ததென்பது உண்மையாயின், செங்குந்த பெண்களினது மொத்தத்தொகைக்கும் பல இனத்தைச் சார்ந்த எல்லா தாசிகளின் மொத்த தொகைக்கும் அளவுகடந்த வித்தியாசம் இருப்பானேன்?



ஆகையால், அறிவுள்ள பொது ஜனங்கள், தென்னிந்தியாவிலுள்ள உண்மைச் செங்குந்தர்களையும் கோயம்புத்தூர் தேவதாசி இனத்தவர்களையும் ஓரே வகுப்பினரெனக் கருதி மயங்கக் கூடாதெனத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமானது தெரிவித்துக் கொள்ளுகிறது.

தி. நா. சபாபதி முதலியார்.
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
*தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்கள்.*

## A Resolution Passed at an Extraordinary Meeting of the Governing Body of the

# South Indian Senguntha Mahajana Sangam,

## MADRAS.

An Extraordinary Meeting of the Governing Body of the South Indian Senguntha Mahajana Sangam, Madras, was held on 21-9-27, to consider a memorial presented to every member of the Madras Legislative Council, the Legislative Assembly, and the Religious Endowment Board and others by the Honorary Secretary of a Sangam styling itself the Senguntha Mahajana Sangam of Coimbatore.

It has been resolved at this meeting that, as certain expressions * found in the memorial are highly damaging to the prestige and fair name of the numerous community of real and pure Sengunthars, steps be taken to protest against the unwarranted appropriation of this name by the Devadasi community of the Coimbatore District, and to enlighten the ladies and gentlemen to whom the memorial had been presented, regarding the existence of a vast population of over six lakhs of Tamil weavers in South India who go by the name of Sengunthars or Kaikolars from time immemorial, and whose heroic

* Viz., "the evil custom of dedicating girls of certain communities of the Hindu Society (***the Sengunthars being one of them***) to temples", and "the deplorable social evil ***peculiar to our community***,"

ancestry, social virtues and exemplary piety as well as their oral traditions and literature, will be the pride and glory of any civilised community living on the face of the earth.

It is natural that the progeny of Tamil Devadasis who live a life of shame and cannot legitimately and openly claim to be classed under any community, should try to conceal the stigma attaching to their birth by assuming not only the names but the honorific titles of the two major Tamil communities in Southern India, viz., the Vellalas (the tillers of the soil) and the Sengunthars or Kaikalors (the weavers). [*Vide* E. Thurston's *Castes and Tribes of Southern India*, Vol. II, p. 127.] But this tendency on their part is now threatening to cast a slur upon the communities in which they strive to merge themselves, particularly upon the Sengunthar community of South India, whose name is now being assumed by the reform-seeking Devadasi community of the Coimbatore District. It has, therefore, become the bounden duty of the South Indian Senguntha Mahajana Sangam, Madras, to enlighten the public on the clear distinction that exists between the Devadasis who lead a life of prostitution and the true Sengunthars of Southern India, who are weavers pure and simple, and had never adopted the evil social custom referred to in the memorial of the Coimbatore Sangam.

That the contention of the Coimbatore Sangam, that the practice of dedicating girls who ultimately take to leading a life of shame is to be found in every Kaikola family, is entirely untenable can be seen from the following figures obtained from the *Census Report* of 1881 for the Coimbatore District. The year 1881 has been chosen because it represents a period when the members of the Devadasi community could not have become conscious of the ignominy of the life of shame they had been leading, and it may therefore give an accurate idea of the proportion which it is our aim to bring to light. In 1881 there were in the Coimbatore District 21796 male and 24211 female Kaikalors (p. 39), and only 1089 Dancing girls of various



Devadasi communities taken together (p. 62). If, as is maintained by the Coimbatore Sangam, prostitution were universal among the Kaikola community of the district, how is this remarkable disparity between the total number of Kaikola women and that of the dancing girls of various denominations taken together, to be accounted for?

It is, therefore, the earnest request of The South Indian Senguntha Mahajana Sangam, Madras, that the enlightened public will not confuse the real Sengunthars of Southern India with the Coimbatore Devadasi Community.

T. N. SABAPATHY MUDALIAR,
*Municipal Counciller, Tiruvalur.*
M SHUNMUKHASUNDARA MUDALIAR, M.A., L.T.,
*Muthialpet High School, Madras.*
**Joint Secretaries.**

## உண்மைச் செங்குந்தரும் போலிச் செங்குந்தரும்.

—:o:—

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசிகள் இனத்தைச் சார்ந்த சிலர், தங்களைச் செங்குந்த மரபினரென்று சொல்லிக் கொள்ளுவதன்றிக், கோவில்களுக்குத் தாசிகளாகப் பெண்களை விடுகிற வழக்கம் தங்களுக்குண்டென்றும், அவர்களை அத்தீய ஒழுக்கத்தினின்றும் மீட்டு நல்லொழுக்கத்தில் ஒழுகச்செய்யும் பொருட்டுக், கூட்டங்கள் கூட்டிக் கோயில்களுக்குத் தாசிகளாகப் பெண்களை விடக்கூடாதென்று தீர்மானங்கள் பல நிறைவேற்றிச் சென்னை சட்டசபை டிப்டி பிரசிடெண்டாக விருந்து அச்சபைக்கோர் ஆபரணம் போல் விளங்கும் டாக்டர் முத்துலக்ஷ்மியம்மையாரை இத்தீய வொழுக்கம் நிறுத்தப்படுமாறு ஒரு மசோதா சட்டசபையில் கொண்டு வரும்படிக் கேட்டுக் கொண்டு, அரசாங்கத்தாரையும் சட்டசபை அங்கத்தினரையும், அம்மசோதாவை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ளுவதாகவும் மேற்கண்ட தேவதாசி மரபைச் சேர்ந்த போலிச் செங்குந்த கூட்டத்தாரால் ஒரு மனுக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இழிந்த தொழிலென யாவராலும் கருதப்படும் அத்தீய வொழுக்கத்தை ஒழிக்க அவர்கள் செய்யும் முயற்சிக்குப் பொது ஜனங்கள் யாவரும் ஒத்தாசைசெய்வது அவசியமேயாம். எல்லாம் வல்ல இறைவனும் அவர்க்குத் துணை செய்வாராக.

ஆனால், கோயம்புத்தூர் ஜில்லாவிலும் மற்றுஞ் சிலவிடங்களிலும் தங்கள் பெண்களைத் தாசிகளாக்கும் வழக்கமுடையோர், தாம் செங்குந்த குலப் பிரதிநிதிகளென முன்வந்து பொதுவாகச் செங்குந்தர்களுக்குத் தாசித்தொழில் உண்டென்று சொல்லுவது, நவவீரர் வழி வந்தோரும், மேற்கூறிய அநாகரீக வொழுக்கத்தில் ஒரு சிறிதும் சம்பந்தப்படாதவருமாகிய உண்மைச் செங்குந்தர்களுக்கு ஒருபெருந்தாழ்வை யுண்டாக்குகிறதென்பதை எண்ணிலர் போலும்.

செங்குந்தரின் பிரதிநிதிகளெனச் சொல்லிக்கொண்டு முன்வரும் முற்கூறிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் உண்மைச் செங்குந்தர்களா? செங்குந்தர்களுக்கிவ்விழிந்த ஆசாரம் உண்டெனச் சொல்லுதல் பொருந்துமா? என்பதைப் பற்றிப் பொது ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமேயாம்.

செங்குந்தர் என்னும் பதம் மேன்மையான நெறியில் ஒழுகுபவர் என்றும், பகைவரது உதிரத்தில் தோய்ந்த ஈட்டிப்படையைக் கையிலே தாங்கிய வீரர் என்றும் பொருள்படும். இக்குந்தர்களுக்கே கைக்கோளரென்னும் வேறொரு பெயருமுண்டு. அப்பெயருக்கு ஒழுக்கத்தின் கொள்கையோர் என்பது பொருள். இவ்விரு பெயர்களுக்கேற்ப இவர்கள் பண்டைக் காலத்தில் சோழ அரசர்களிடத்தில் ஆஸ்தான வித்வான்களாகவும், அமைச்சர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், சேனைத்தலைவர்களாகவும், படைவீரர்களாகவும் விளங்கி வந்ததன்றித், தாங்கள் வைதிகச் சைவ நன்னெறியில் ஒழுகியும், பிறரை அந்நெறியில் ஒழுகச்செய்தும், சைவத்தைப் பல துறைகளிலும் பரிபாலித்து வந்தனர் என்பது பல சரித்திர மூலமாயும் கல்வெட்டுகள் மூலமாயும், புராணங்கள் மூலமாயும் அறியக் கிடக்கின்றது.

இத்தகைபவீரத்தன்மையும் சைவஒழுக்கமும் கொண்டுள்ளவர்கள்

“இழிபவருயர்ந்தோர் மூத்தோரிளையவர் கழியா நோயால்
கழிபவர் யாவரேனும் கண்வலைப்பட்டு நெஞ்சம் [காட்டிப்
அழியவர் பொருள்கொண் டெள்ளுக்கெண்ணெய் போலளந்து
பழிபடு போகம் விற்போரும்.
‘விலைக் கோட்டும் பேரல்குலாரும்’

செய்யும் இழிதொழிலைச் செய்யுமாறு தங்கள் குலப்பெண்களை விட்டு இருப்பார்கள் என்பது பொருந்தாததாகும்.

அன்றியும், செங்குந்த குலதிலகர்களாய் விளங்கிய ஒட்டக்கூத்தர், படிக்காசுப் புலவர் முதலிய புலவர் பெருமான்களின் சரித்திரங்களை யெழுதிய பலரும், அவர்களை உபசுப்பிரமணிய



மரபினராகிய நவவீரர் வழித் தோன்றியவர்களெனக் கூறியுள்ளார்களேயன்றி, தேவதாசிப் பரம்பரையினரென்று கூறினாரில்லை. உபதேசகாண்டத்தைத் தமிழிற் செய்தருளிய குகனேரியப்ப நாவலர் முதலான செங்குந்த சிலாக்கியர்களையும் அவரவர் சரிதங்களில் அவ்வாறே கூறியுள்ளார்கள். நிற்க, புராண காவியங்களில் வரைவின் மகளிரது வீதியைப்பற்றிச் சொல்லுங்கால், பரத்தையர் வீதி, கணிகையர் வீதி எனப் பல தலையங்கமிட்டுப் பாடியுள்ளபடியாலும், சேக்கிழார் சுவாமிகள், பெரிய புராணத்துள், ‘பதியிலார் குலத்தில் வந்த பரவையார்’ என்று எடுத்தாண்டிருப்பதினாலும், கணிகையர் எக்குலத்தவரென்று எப்புராணத்திலும் எடுத்துக் கூறாமையாலும், பொது மகளிரும் அவர் குலத்தில் வந்த ஆடவரும் செங்குந்தராகார்.

தேவதாசிகளுக்குள்ளே சிலர், செட்டித் தாசிகளென்றும், சிலர் வேளாளத் தாசிகளென்றும், மற்றும் சிலர் செங்குந்தத் தாசிகளென்றும், வேறு சிலர் வாணிய தாசிகளென்றும், வடுகதாசிகளென்றும், வன்னிய தாசிகளென்றும், இன்னும் சிலர் கம்மாள தாசிகளென்றும் பலவிதமாகப் பேர் வைத்துக்கொண்டு வடநாட்டிலும், தென்னாட்டிலும் வசித்து வருகின்றனர். அவர்கள் அவ்விதம் சொல்லக் காரணமென்னவெனின், நம் நாட்டிலுள்ள ஒவ்வோரினத்தவரும் பணிசெய்வோன், தேவதாசி முதலிய தொழிலாளிகளைத் தனித்தனியே அமர்த்திக் கொண்டிருப்பதினாலேயே. வேளாளருக்குத் தொழில் செய்யும் தாசிகளுக்கு வேளாளத் தாசிகளென்றும், செங்குந்தருக்குத் தொழில் செய்யும் தாசிகளுக்குச் செங்குந்தத் தாசிகளென்றும், மற்றுமவ்வாறே அவ்வச் சாதியாருக்குத் தொழில் செய்யும் தாசிகள் அவ்வச்சாதியின் பெயரையே, கூறிக்கொண் டிருக்கிறார்களென்றும் தெரிகிறது. அவற்றை நம் நாட்டின் பண்டைய நிலையை உணர்ந்தோரும், நூலாராய்ச்சிக்காரரும், பற்பல தாசிகளது வழக்க ஒழுக்கங்களை உணர்ந்தோரும் நன்கறிவர்.

நாளது 1927௵ செப்டம்பர்௴ 13௳ மாயவரத்தில் தஞ்சை ஜில்லா வெள்ளாளர் கான்பரன்ஸ் ஒன்று கூடியதாகவும், அக்கான்பரன்சுக்கு இசை வெள்ளாள ஆண்களும் தேவதாசிப் பெண்களும் வந்திருந்தார்களென்றும், அச்சங்கத்திற்குக் கோயம்புத்தூர் செங்குந்த மகாஜன சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தலைமை வகித்தாரென்றும், தேவதாசிகளை ஜில்லா போர்டு, தாலுக்கா போர்டு, முனிசிப்பாலிடி முதலான தலஸ்தாபனங்களிலும், சட்டசபையிலும் அங்கத்தினராக நாமினேஷன் செய்ய வேண்டுமென்று மாக்ஷிமை தங்கியசர்க்கார் அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்ததாகவும் 16—9—27-ல்

வெளிவந்த 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் கண்டிருக்கிறது. அவற்றிலிருந்தே, பல ஜாதிகளுக்கும் தொண்டு செய்யத் தேவதாசிப் பெண்கள் உண்டென்றும், அவர்கள் அவ்வச்சாதிகளின் பெயர்களால் அழைக்கப்படுகிறார்களென்றும், ஆனால் அவர்கள் பெயருக்கு முன்னே இசை என்ற ஒரு அடைமொழியை உபயோகப்படுத்தி இருக்கிறார்களென்றும் தெரிகிறது. அதுபோலச் செங்குந்தருக்குத் தொழில் செய்யும் வகுப்பாரும் அப்பெயருக்கு முன்னாகிலும், பின்னாகிலும் இசை, அல்லது தாசி என்ற ஒரு அடைமொழியை யுடையவராவரேயன்றி உண்மைச் செங்குந்தராகமாட்டார்கள். ஆதலால், உண்மைச் செங்குந்தர்கள் ஓடி ஒளிந்து உள்ளதை மறைத்துப் புதியதொரு ஜாதியைப் புகலாமலிருக்க வேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்,

R. M. குமரவேலு முதலியார்.

காரைக்கால்.

## ஓர் சம்பாஷணை.

---

கோபாலன்:—கிருஷ்ணா! வந்தனம். ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்.

கிருஷ்ணன்:—வந்தனம். நேற்றிரவு வந்தேன். சென்ற மாதம் ஒரு நாள் நான் இங்கு வந்திருந்த சமயம், யாரோ ஒரு பெரியவர் வந்ததும் அவருக்கு ஒரு ரூபாய் கொடுத்து அனுப்பினாயே? அவர்யார்? பார்வைக்குப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராக தோன்றுகிறதே. அவருடைய விருத்தாந்தம் என்ன? தயவு செய்து அதை எனக்கு உரைக்கவேண்டும்.

கோ.—ஓஹோ! அந்த பெரியவரா! சரி. நீ அவரைப்பற்றி அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியதுதான். சொல்லுகிறேன் கேள்.

தஞ்சையில் அவர் ஒரு பரம் பரையான பணக்காரர். ஒரு லட்ச ரூபாய் பொருமான ஆஸ்தியையுடையவர். ரொக்கப்பணம் அவரிடம் விசேஷமாகக் கிடையாது எல்லாம் நிலங்கள்தான் அவருக்கு சகலஐஸ்வரியங்களும் பொருந்தி இருந்தன. அவர் பெயரே தனவந்தபிள்ளை என்றால் வேறு சொல்லவும் வேண்டுமோ? குணபாலன் என்ற ஓர் ஆண் மகவுமாத்திரம் அவருக்கு இருந்தது. அவருக்கு தன்மகன்தகுந்த பருவம் அடைந்ததும் ஏராளமாகப்பணம் செலவு செய்து கலியாணம் பண்ணிக் கண்ணால் பார்க்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று.



"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல்"

என்றபடி ஏழைகளும் கூடக் கடன் கொண்டாவது கலியாணத்தைப் பிரபுக்கள் நடத்துவது போல் நடத்தவேண்டுமென்று ஆசை கொண்டால் ஒரு பிரபு ஆசை கொண்டதைக் கேட்பானேன். அவர் தன்னை யொத்த ஒரு பிரபுவிடம் சம்பந்தம் கொண்டார். தன்னிடம் ரொக்கப்பணம் அதிகமாக இல்லாததால் நாற்பதினாயிரம் ரூபாய் கடன் வாங்கி பெரியபந்தல், உயர்ந்த ஜவுளி, அதிக நகை, பெயர் பெற்ற தாசிகள் சதுர், அரிய சங்கீத வித்துவான்களின் கச்சேரிகள், பெரிய மேளங்கள், ஓயாத விருந்து, டாம்பீகமான நகர்வலங்கள் முதலானவைகளுக்கு ஏராளமான பொருள் செலவு செய்து கலியாணத்தை வெகு சிறப்புடன் நடத்தினார். பின்பு அவர் கூடுதலான வட்டிக்குக் கடன் வாங்கி இருந்ததினால் அவருடைய வருஷ வருமானத்தில் தன் வீட்டுச் செலவுபோக கடன் கொடுத்தவர்களுக்கு வட்டி கொடுக்க அவரால் முடியவில்லை. கடன் கொடுத்தவர்கள் நெருங்கி அவரை கேட்கும்பொழுது அவர் ஐ. பி. கோர்டில் இன்சால் வெண்டு விண்ணப்பம் செய்துகொண்டார். கோர்ட்டார் அவரை இன்சால்வெண்டாகத் தீர்மானித்து அவருடைய சொத்துக்களை எல்லாம் ஏலத்தில் போட்டு, அந்தத் தொகையை கடன்காரர்களுக்கு ஈவு வைத்துக் கொடுத்தார்கள். இவர் ஆஸ்தியை இழந்ததனால் ஒரு சாண் வயிறு வளர்க்க திண்டாடினார். இவர் பரம்பரையான பணக்காரர் ஆதலால், இவருக்கு ஒரு வேலையும் செய்யத் தெரியாமல் யாசகம் வாங்கி ஜீவிக்கிறார். பலமுறையும், இவர் என்னைக் கெஞ்சிக் கேட்டதால் அன்று நான் ஒரு ரூபாய் கொடுத்து அவரை அனுப்பினேன்.

ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் எழுபிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாய் நாடு.

என்றபடி, தமக்குள்ள வருமானத்துக்கு அதிகமாய் கடன் கொண்டு செலவு செய்பவர்கள் மானமழிந்து மதிகெட்டு, தூர தேசத்துக்கு ஓடிப்போன போதிலும் அவ்விடத்திலும், எல்லாருக்கும் திருடனாகி, ஏழு பிறவிகளிலும் பாவிகளாய்ப் பிறந்து, நல்லவர்களுக்குங்கூட பொல்லாதவர்களாவார்கள் என்பதுபோல அவர் ஆகிவிட்டார். "வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்ற நீதிவாக்கியத்தை மறந்துவிட்டார் போலும், கடன்

கொண்டதால் இவர் அடைந்த நிலைமையைப் பார்த்தாயா! இதனாலன்றோ "கடன்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான். இலங்கை வேந்தன்" என்ற வாக்கும் உண்டாயிற்று.

இப்படி அநேக ஏழைகளும் தன் தகுதிக்குமேல் கடன் கொண்டு கலியாணம் செய்துவிட்டு, பின் கடன் கொடுத்தவர்களுக்கு அடிமைகளாகிக் கஷ்டப்படுகிறார்கள். இவர்களும் "பொருள்தனை போற்றிவாழ்" என்ற அமுதவாக்கைக் கவனிக்கிறார்களில்லை.

ஆகையால், ஏழையானாலும் சரி; பெரிய பிரபுவானாலும் சரி; தகுதிக்குமேல் கடன் கொண்டு மணமுடிக்காமல், தகுதிக்குத் தக்கவாறு செய்தால் வறுமையை அடையமாட்டார்கள். எப்பொழுதும் மரியாதையாகவே காலக்ஷேபம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களிடம் சதாகாலமும் இலக்ஷ்மி குடிகொண்டிருப்பாள்.

**கிரு:**—நேயா! இப்பொழுது கடனால் வரும் துன்பத்தையும், அதை எய்திய அப்பிரபுவின் விருத்தாந்தத்தையும் எனக்கு நன்குபுரிய உரைத்தாய். அனைத்தையும் அறிந்தேன். வேறு எவ்விதத்திலெல்லாம் மனிதர்கள் கடன் கொண்டு கெட்டுப் போகிறார்களென்பதை எனக்குத் தெளிவாய் தயவுசெய்து சொல்லவேண்டும்.

**கோபாலன்:**—நீ சொல்வது சரிதான். அவசியம் அறியவேண்டுவதுதான். இப்பொழுது எனக்குக் கொஞ்சம் அலுவல் இருக்கிறது. மறுமுறை சமயம் வாய்க்கும்பொழுது சொல்லுகிறேன். நேரம் ஆகிவிட்டது. போய்வா வந்தனம்.

**கிருஷ்ணன்:**—நல்லது பின்பு கேட்டுக்கொள்ளுகிறேன். போய் வருகிறேன் வந்தனம்.

(தொடரும்) A. M. ஆறுமுக முதலியார்.
அம்பா சமுத்திரம்.

## கடிதங்கள்.

வீரவநல்லூர். செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 11-வது ஆண்டு 2-வது கூட்டம் சென்ற 20—8—27ல் மாலை 4-மணிக்குக் கூடிற்று. அவ்வமயம் அங்கு விஜயம் செய்திருந்த உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீமான் சு. ஆவுடைநாயக முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். கடவுள் வாழ்த்து நடந்தபின் மேற்படி சங்கக்காரியதரிசியால் சென்ற கூட்டத்தின் விஷயம் வாசிக்கப்பட்டுச் சைவ பிள்ளைகளுக்குப் பரிசளிக்கப்பட்டது. தலைவர் முன்னுரை முடிந்ததும்



ஸ்ரீமான் சி. வ. ப. அருணாசல முதலியார் அவர்கள் 'பொதுசேவை' என்னும் விஷயத்தை மிகவும் தெளிவாகக் கூறினர். தலைவர் முடிவுரையோடு சபை இனிது கலைந்தது.

சென்ற 16-9-27-ல் மாலை 3½-மணிக்குச் சங்கக் கமிட்டி கூடப்பெற்றது. ஸ்ரீமான் ந. பிச்சாண்டி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் அடியிற்கண்ட விஷயங்கள் நடைபெற்றது. 1-வது மகமை வசூல்செய்து கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி சங்க ஆதரவில் நடைபெற்று வரும் பாடசாலைக்கு மேற்படி கமிட்டி மெம்பர்கள் பண உதவி செய்வதாய் வாக்களித்திருக்கிறார்கள். பகல் பாடசாலைக்கு ஞாயிற்றுக்கிழமைகளும், மாதாந்த சுக்கிரவாரமும், ஒவ்வொரு மாதத்துக் கார்த்திகை யன்றும், விடுமுறை நாள்விட தீர்மானமாயிற்று. ஒவ்வொரு மாதக் கார்த்திகையன்றும் கல்வியில் தேரிய பிள்ளைகளுக்கு 3 பிரைஸாக வைத்துப் பிரைஸ் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று. 4¼ மணிக்கு மாணவர்களால் தேவாரம் பாடி கூட்டம் கலையப்பட்டு மேற்படி கட்டிடத்தில் மாலை 5-மணிக்கு ஸ்ரீமான் ந. ஆ. சிதம்பர முதலியார் தலைமை வகிக்க. ஸ்ரீ பூமிநாத சுவாமி கோவில் தேவார பாடசாலை பிள்ளைகளால் தேவாரம் பாடிய பின்னர் தலைவர் முன்னுரையோடு ஸ்ரீமான் ஆ. ஆறுமுக முதலியார் அவர்கள் கல்வியென்ற விஷயத்தைத் தெளிவாய்ப் பேசினார்கள். சபாநாயகர் பின்னுரையுடன்சபை இனிது கலைந்தது. என்று சங்கக்

காரியதரிசி,
சி. ப. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

### செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம கீழ்க் குறிப்பிட்டுள்ள செங்குந்த மாணாக்கர்களுக்கு அரைச் சம்பளம் உதவத் தீர்மானித்திருக்கின்றது:—

(1) S. காளத்தி:—ஆறாவது பாரம், செந்தோம் ஹைஸ்கூல், மயிலாப்பூர்.

(2) கா. பக்கிரிசாமி
(3) S. சண்முகம்
} ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பு, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

(4) மா. அ. சந்திரசேகரன்:—மூன்றுவது பாரம், போர்டு ஹைஸ்கூல், உத்திரன்மேரூர்.

(5) மா. சிவப்பிரகாசம்:—மூன்றுவது பாரம் U. F. C.M. ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

(6) வே. சிங்காரவேலு:—ஜூனியர் இண்டர்மீடியட்வகுப்பு, இராஜதானிக் கல்லூரி, சென்னை.

(7) தி. பொன்னுசாமி:—நான்காவது பாரம், போர்டு ஹைஸ்கூல், வந்தவாசி.

(8) சி. மீனாக்ஷிசுந்தரம்:—நான்காவது பாரம், நேஷனல் ஹைஸ்கூல், நாகபட்டினம்.

(9) K. வீராசாமி:—சீனியர் இண்டர்மீடியட் வகுப்பு, மீனாக்ஷி கல்லூரி, சிதம்பரம்.

(10) K. சண்முகம்:—நான்காவது பாரம், போர்டுஹைஸ்கூல், திருவாரூர்.

(11) அ. மாணிக்க முதலியார்:—சீனியர் இண்டர்மீடியட் வகுப்பு, சென்தாமஸ் கல்லூரி, திருச்சூர், கொச்சி.

தென்னாற்காடு, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு யோசனையிலிருக்கிறது. சங்கத்தின்பால்ய நிலையில் இன்னும் பல மாணாக்கர்களுக்கு உதவ முடியாமலிருப்பதைக் குறித்து வருந்துகின்றோம்.

தி. நா. சாபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.,
ஷை சங்க அமைச்சர்கள்.

## தலைச்சங்கத்தின் நன்கொடை வரவு.

ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காகப் பொருள் உதவிசெய்யும்படி தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் கோரிய வேண்டுகோளுக்கிணங்கிப் பொருளுதவி புரிந்த கனவான்களின் விபரம்:—

| | | |
|---|---|---|
| உயர்திருவாளர். | வீ. குரு. மு. முத்தைய முதலியார் அவர்கள், ஜவுளி வியாபாரம், அரிசிமில் சொந்தக்காரர், திருமலைராஜன் பட்டினம். | 10—0—0 |
| ,, | சிங்கப்பூர் S. அண்ணாமலை முதலியார் அவர்கள், கயிலி வியாபாரம், புதுச்சேரி. | 16—0—0 |

பிரதி மாதமும் கொடுப்பதாய் வாக்களித்துக் கடந்த ஆவணி மாதத்திற்காகப் பொருளளித்த அன்பர்களின் விபரம்:—

**காஞ்சிபுரம்.**

| | | |
|---|---|---|
| உயர்திருவாளர் | ம. கெங்காதர முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை, ஆடிசன் பேட்டை. | 10—0—0 |
| ,, | ந. சோமசுந்தர முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 2—0—0 |



| | | |
|---|---|---|
| உயர்திருவாளர் | வே. மு. கந்தசாமி முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 2—0—0 |
| ,, | வே. முனுசாமி முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 2—0—0 |
| ,, | தீ. தேவராய முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 2—0—0 |
| ,, | வெங்கடாசல முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 0—8—0 |
| ,, | சுப்பராய முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 0—8—0 |
| ,, | கி. முனியப்ப முதலியார் அவர்கள், ஜவுளி மளிகை. | 0—8—0 |
| ,, | நா. அருணகிரி முதலியார் அவர்கள், பட்டு மளிகை. | 1—0—0 |
| ,, | மா. கந்தசாமி முதலியார் அவர்கள், பட்டு மளிகை. | 1—0—0 |
| ,, | தி. அருணாசல முதலியார் அவர்கள், கயிலி வியாபாரம், பெரியகாஞ்சீபுரம் (உண்டிவசூல்) ரூபா. | 2—8—0 |

**சைதாப்பேட்டை.**

கீழ்க்கண்டுள்ள இவ்வூர்க் கயிலி வியாபாரிகள் மாதந்தோறும் விற்றுமுதலான உருப்படிகளின்பேரில் உருப்படிக்கு ஒரு பை வீதம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கததிற்கு மகமைப் பணமாகச் செலுத்திவர வாக்களித்துள்ளார்கள். இங்குக் காட்டியிருக்கும் தொகை ஆவணி மாதத்திய வசூல்.

| | | |
|---|---|---|
| ,, | பெரிய பழையகாட்டுக் கம்பெனியார் | 24—12—1 |
| ,, | பெஸ்ட்டு பளையகாட்டுக் கம்பெனியார் | 28—14—9 |
| ,, | சுப்பீரியர் பளையகாட்டுக் கம்பெனியார் | 26—10—0 |
| ,, | ரியல் பளயகாட்டுக் கம்பெனியார் | 7—6—9 |
| ,, | எஸ். இரத்தினவேலு முதலியார் அவர்கள், | 1—0—0 |
| ,, | அரு. ஆ. மு. முத்துவேலு முதலியார் அவர்கள் கயிலி வியாபாரம். | 3—0—0 |

**சென்னை.**

| | | |
|---|---|---|
| ,, | மதராஸ் பளயக்காட் கம்பெனியார் | 50—0—0 |

சிறந்த குலாபிமானத்துடன் நன்கொடை அளித்துவரும் இக்கனவான்களுக்குச் செங்குந்த குலமக்கள் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர். இவ் வள்ளல்களுக்குச் செங்குந்தகுல சமூகத்தின் சார்பாக நாங்கள் வந்தனமளிக்கின்றோம்.

சென்னை, 23—9—27 } தி. நா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்து அமைச்சர்கள்.

உ

# செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம்.

கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

பிரபவஹு புரட்டாசி௴, ஐப்பசி௴, 1927. அக்டோபர்௴

தக்ஷிணயணம், சரத்ருது, கலி-5029, பசலி-1338, சாலி-1849, பிரபவ-1.

| அக்டோபர். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷநாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | சனி | பஞ், 23-34 | அநு, 34-48 | சி, 60 [அ | பிரயாணம் |
| 2 | 16 | ஞாயி | சஷ், 28-30 | கேட், 40-34 | ம, 41-13 | கரிநாள் |
| 3 | 17 | திங்க | சப், 31-40 | மூல, 46-30 | சி, 44-35ம | சுபதினம் |
| 4 | புரட்டாசி௴ 18 | செவ் | அஷ், 33-40 | பூர, 48 | சி, 48-5அ | ஆயுதபூஜை |
| 5 | 19 | புத | நவ, 32-20 | உத், 48-30 | அ,48-28சி | ஏனுதிநா வி-தச |
| 6 | 20 | வியா | தச, 28-33 | திரு, 45-45 | சி, 60 | வேதாந்ததேசிக |
| 7 | 21 | வெ | ஏகா, 24-30 | அவி, 43-5 | சி, 60 | மார்த்வ ஏகாதசி |
| 8 | 22 | சனி | துவா, 20-50 | சத, 39-40 | அ,37-43ம | நரசிங்கமுனைய |
| 9 | 23 | ஞாயி | தி,6-30 ச,54 | பூர,31-8 | சி, 31-8 அ | ஜபிக்க |
| 10 | கன்னியா௴ 24 | திங்க | ○; 51-48 | உத், 23-34 | சி, 60 | திரு-நிறைபணி |
| 11 | 25 | செவ் | பிர, 42-36 | ரே, 16 | சி, 60 | உருத்திரபசுபதி |
| 12 | 26 | புத | துதி, 32-50 | அஸ், 11-8 | ம, 8-8 சி | நெருப்பிட |
| 13 | 27 | வியா | திரி, 24-32 | பர,4-8 கி,56 | சி, 1-8 ம | கிருத்திகை விர |
| 14 | 28 | வெ | சது, 27-3 | ரோக, 51 | ம, 50-45 | நந்தனர் |
| 15 | 29 | சனி | பஞ், 11-23 | மிரு, 49 | சி, 60 | உபநயனம் |
| 16 | 30 | ஞாயி | சஷ், 7-30 | திரு, 40-8 | சி, 60 | கதிராறுக்க |
| 17 | 1 | திங்க | சப், 5-30 | புன, 48-5 | சி,48-5. அ | துலா ஸ்நானம் |
| 18 | 2 | செவ் | அஷ், 5-20 | பூச, 50-40 | சி, 60 | மருந்துண்ண |
| 19 | 3 | புத | நவமி, 6-50 | ஆயி, 54-50 | சி, 60 | சுபதினம்தனுசு |
| 20 | 4 | வியா | தச, 9-50 | மகம், 59-50 | அ,59-50சி | மாடுவாங்க |
| 21 | ஐப்பசி௴ 5 | வெ | ஏகா, 14-20 | பூர, 60 | சி, 60 | சர்வமத்வ ஏ-தசி |
| 22 | 6 | சனி | துவா, 19-10 | பூர, 5-30 | சி, 5-30 ம | சனி பிரதோஷ |
| 23 | 7 | ஞாயி | திர, 25 | உத், 13-20 | அ, 60 | நாக ச-ஸ்நானம் |
| 24 | 8 | திங்க | சது, 32-2 | அஸ், 20-50 | சி,20-43பி | தீபாவளிபண்டி |
| 25 | 9 | செவ் | ●, 40-50 | சித், 28-30 | சி, 60 | கேதாரிநோன்பு |
| 26 | துலா௴ 10 | புத | பிர, 44-20 | சுவா, 36-42 | சி, 60 | மெய். சங்-ச ஆ |
| 27 | 11 | வியா | துதி, 50-2 | விசா, 43-5 | சி, 60 | சந்திர தரிசனம் |
| 28 | 12 | வெ | திரி, 56-38 | அநு, 50 | சி, 50 ம | பூசலார் நாயனர் |
| 29 | 13 | சனி | சது, 60 | கேட், 56-15 | சி, 60 | நாக சதுர்த்தி |
| 30 | 14 | ஞாயி | பஞ், 0-20 | மூல, 60 | அ, 60 | ஐயடிகள் மண |
| 31 | 15 | திங்க | பஞ், 4 2 | மூல, 1-5 | சி, 1-5, ம | சூரசம்மாரம் கந்த சஷ்டி |


80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல் ஷண்முகம் பட்டணம்பொடி



காரம் மணம் நிறம் குணம் வாஸனை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்ட் பாக்ஸ் 140, மதுரை.

முதல் தரமானது

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் | தபால் சார்ஜு | பாக்கிங் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீ. 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீ. 1-க்கு ரூ. 4.

பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக்கணக் கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று, தினசரி லெட்டர்களால் புகழ் பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாஸனை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ் வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான் களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோ கப்படுத்தி இன்புறுங்கள்.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே நீங்கள்
ஏன் கவலைப்படுகிறீர்கள் !

40,000 ஜனங்களால் வாசித்து எங்கும் பிரபல்யமடைந்த எமது

## ஆங்கில ஆசான்

தமிழ் எழுத்துக்களை வாசித்தால்
இங்கிலீஷ் பதங்கள் வெகு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இது 9-ம் பதிப்பு, 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இப் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு க-அணா முதல் 3,000 ரூபா வரைக்கும் மாதச்சம்பள கணக்கு போடப்பட்டிருக்கிறது. இதற்குப்பின் வந்துள்ள போலி புத்தகங்களை வாங்கி ஏமாறாமல், இந்தப் படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் போட்டுள்ளதை பார்த்து வாங்குங்கள்.




முழு காலிகோ பைண்டு புத்தகம் 1-க்கு ரூ. 2.

வி. பி. தபால் செலவு அணா 8.

அந்நிய நாட்டினர் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

---

முந்துங்கள்! ]　　　[உடனே சேருங்கள் !!

இரண்டாம் ஆண்டு தொடங்கிவிட்டது.

வித்வத்துவம் ! அநுபவம் ! ஆச்சரியம் ! விநோதம் ! ஆநந்தம் !
விச்சித்திரம் ! அற்புதம் இவைகளெல்லாம் அடைவது எப்படி ?

எமது

## ஆனந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தர வல்லதான
உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு அவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| வருஷசந்தா: இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. | 1 | 0 |
| மாதிரிப்பிரதி இனம். வெளிநாடுகளுக்கு ரூ. | 1 | 4 |
| சென்ற அக்ஷயவரு பவுண்டு வால்யம் ரூ. | 1 | 6 |

அக்ஷய்வரு சித்திரை மாதத்திலிருந்து வெளிவந்துலவுகிறது.

தி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.